# பழைய ஏற்பாடு

## வகுப்பு அங்கத்தினர் படிப்பு வழிகாட்டி



## *முன்னுரை*

*அடிப்படையில் பழைய ஏற்பாட்டு போதனைகளுக்கு இந்த படிப்புமுறை முக்கியத்துவம் கொடுக்கிறது. விலையேறப்பெற்ற மகத்தான முத்துவின் பகுதியான மோசே மற்றும் ஆபிரகாம் புத்தகங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதையும் சேர்த்து, பரலோகத்தின் ஆலோசனையின்போது, இரட்சகரின் பிறப்பிற்கு ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்வரை அவரது மக்களுடன் தேவனின் நடவடிக்கைகளின் ஒரு குறிப்பை இந்த புத்தகங்கள் கொடுக்கின்றன. விசுவாசத்தின் மற்றும் கீழ்ப்படிதலின் ஆற்றல் மிக்க எடுத்துக்காட்டுகளையும் அவைகள் கொடுக்கின்றன. தேவனை மறந்துபோகுதலின், கீழ்ப்படியாமையின், எதிர்த்தலின் விளைவுகளையும்கூட அவைகள் காட்டுகின்றன. இந்த புத்தகங்களிலுள்ள தீர்க்கதரிசனங்கள், இரட்சகரின் பிறப்பின், பாவநிவர்த்தியின், இரண்டாம் வருகையின், ஆயிரம் வருஷ ஆளுகையின் சாட்சியையும் தாங்கியிருக்கிறது.*

*ஒவ்வொரு வாரத்தின் வீட்டுப் படிப்பை இந்த படிப்பு வழிகாட்டி தொகுத்தளிக்கிறது, பயன்படுத்தும் கேள்விகளுக்கான நுட்பமான அறிவை அளிக்கிறது, உங்கள் படிப்பிற்கான உங்கள் புரிந்துகொள்ளுதலையும் அறிவையும் அதிகரிக்கிறது. பின்வரும் பயன்களுக்காக இந்த படிப்பு வழிகாட்டி வடிவமைக்கப்பட்டிருக்கிறது:*

*அ. தனிப்பட்ட வேதப் படிப்பு. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளின் போதனைகள் எவ்வாறு கிறிஸ்துவண்டை நெருங்கிவர உங்களுக்குதவலாம் என்பதைப் பார்க்க, ஒவ்வொரு வீட்டுப்படிப்பை சேர்த்து பயன்படுத்தும் கேள்விகள் உங்களுக்கு உதவும்.*

*ஆ. குடும்ப வேதப் படிப்பு. குடும்ப இல்ல மாலையின் பாடங்களுக்கும் மற்ற பிற குடும்ப கலந்துரையாடல்களுக்கும் இந்த படிப்பு வழிகாட்டி ஒரு விலைமதிப்பற்ற கருவியாயிருக்கும்.*

*இ. வகுப்பு கலந்துரையாடலுக்கான ஆயத்தம். வீட்டுப் படிப்பை நீங்கள் படிக்கும்போதும் பயன்படுத்தும் கேள்விகளைக் கருத்தில்கொள்ளும்போதும், உங்கள் சுவிசேஷ கோட்பாடு வகுப்பில் அர்த்தமுள்ள பங்கேற்பை நீங்கள் உருவாக்க நீங்கள் சிறப்பாக ஆயத்தப்படுவீர்கள்.*

*உங்கள் படிப்பில் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால், “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்” (யோபு 19:25) என யோபுடன் சேர்ந்து நீங்களும் சாட்சியளிக்கலாம்.*

## *“இது எனது பணியும் எனது மகிமையுமாயிருக்கிறது”* 1

*மோசே 1*

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. மோசே **1:1–11.** மோசே தேவனைக் காண்கிறான், அவருடன் முகமுகமாய் பேசுகிறான். பிதாவின் ஒரே பேறான குமாரனின் சாயலில் அவன் தேவனின் குமாரன் என்பதை மோசே அறிந்துகொள்கிறான்.*

*ஆ. மோசே **1:12–23.** சாத்தான் மோசேயுடன் மோதுகிறான்; மோசே அவனை வெளியே விரட்டுகிறான்.*

*இ. மோசே **1:24–39.** தேவன் மீண்டும் தோன்றி அவனுக்குரிய பணியையும் மகிமையையும் போதிக்கிறார்.*

- *மோசே **1:1–7**வது வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள அனுபவங்களிலிருந்து*

*தேவனைப்பற்றி மோசே என்ன அறிந்துகொள்கிறான்? தன்னைப்பற்றி மோசே என்ன அறிகிறான்? நாம் தேவனின் பிள்ளைகளென்றும், அவரது குமாரனின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோமென்றும் அறிந்துகொள்வது நமது வாழ்க்கையில் என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணலாம்?*

- *சாத்தானின் சோதனையை தாங்க மோசே எவ்வாறு பெலத்தைப் பெற்றான்? (மோசே 1:18, 20–21 பார்க்கவும்). மோசே எவ்வாறு சாத்தானை விலகச் செய்தான்? சோதனையைத் தாங்க ஜெபம் எவ்வாறு நம்மை பெலப்படுத்தும்? இந்த பெலத்தைப் பெற வேறு என்னவெல்லாம் நாம் செய்யமுடியும்?*
- *நம்மால் அளவிடமுடியாத உலகங்களையும் மக்களையும் தேவன் படைத்திருந்தாலும்கூட, அவைகள் அனைத்தையும் அவர் அறிந்திருக்கிறாரென மோசேக்கு அவர் உறுதியளித்தார் (மோசே 1:35). பரலோகப் பிதாவும் இயேசு கிறிஸ்துவும் உங்களைத் தனிப்பட்டவர்களாக அறிந்திருக்கிறார்களென்றும் உங்களை நேசிக்கிறார்களென்றும் உங்களால் எவ்வாறு உணர்ந்துகொள்ளமுடிந்தது?*
- *தேவனின் பணியையும் மகிமையையும் என்னவென அறிந்துகொள்வது நமக்கு ஏன் முக்கியமானது? இந்த மகத்தான பணியில் அவருக்குதவ என்ன சில குறிப்பிட்ட வழிகளிருக்கின்றன?*

---

## *“நீ பிறப்பதற்கு முன்பே நீ தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறாய்”* 2

***ஆபிரகாம்3; மோசே 4:1–4***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. ஆபிரகாம் 3:11–12, 22–23; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 138:53–57. கர்த்தருடன் ஆபிரகாம் முகமுகமாய்ப் பேசுகிறான், அநித்தியத்திற்கு முந்தைய வாழ்வில் அநேக “உத்தமமான மகத்தான” ஆவிகள் தங்களின் பூலோக ஊழியங்களுக்கு, முன்நியமிக்கப்பட்டார்களென்பதை அறிந்துகொள்கிறான் (ஆபிரகாம் 3:11–12, 22–23). இரட்சகரின் உயிர்த்தெழுதலுக்கு முன் ஆவி உலகத்திற்கு அவரது வருகையைப்பற்றிய ஒரு தரிசனத்தில் “உத்தமும் மகத்தானதுமானவைகளைப்பற்றி” தலைவர் ஜோசப் எப்.ஸ்மித் அதிகமானவற்றை அறிந்துகொள்கிறார் (கோ.உ 138:53–57).*

*ஆ. ஆபிரகாம் 3:24–28; மோசே 4:1–4. பரலோகத்தின் ஆலோசனையில் இயேசு கிறிஸ்து நமது இரட்சகராக தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றும் அவரைப் பின்பற்ற நாம் தெரிந்துகொண்டோமென்றும் ஆபிரகாமுக்கும் மோசேக்கும் தரிசனத்தில் காண்பிக்கப்பட்டது. லூசிபரும் (சாத்தான்) அவனைப்பின்பற்றிய ஆவிகளும் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டதும் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது.*

- *ஆவி உலகத்தின் அவரது தரிசனத்தில் தலைவர் ஜோசப் எப்.ஸ்மித் எதைப் பார்த்தார்? (கோ.உ 138:53 பார்க்கவும்). எதைச் செய்ய இந்த மக்கள் முன்நியமிக்கப்பட்டார்கள்? (கோ.உ 138:55–56 பார்க்கவும்).*
- *தங்களின் அழைப்புகளுக்கு தீர்க்கதரிசிகளை முன்நியமிக்கப்படுவதற்கும் கூடுதலாக, பல்வேறு வழிகளில் அவரது இராஜ்யத்தைக் கட்டிஎழுப்புவதற்கு உதவ அநேக “தெரிந்துகொண்ட பிற ஆவிகளை” தேவன் முன்நியமித்தார். எதைச் செய்ய நீங்கள் முன்நியமிக்கப்பட்டிருக்கலாம்? (கோ.உ 138:56 பார்க்கவும்).*
- *நமது இரட்சகராக இருக்க, எந்த இரண்டு ஆவிகள் பரலோகத்தின் ஆலோசனையில் முன் வந்தார்கள்?*

(ஆபிரகாம் 3:27; மோசே 4:1–2 பார்க்கவும்). அவர்கள் கூறியவை எவ்வாறு வித்தியாசமானதாயிருந்தன? நமது மீட்பராயிருக்க பரலோகப் பிதா ஏன் இயேசு கிறிஸ்துவை தேர்ந்தெடுத்தார்? (மோசே 4:2–3 பார்க்கவும்).

கூடுதலான படிப்பு: ஏசாயா 14:12–15; வெளிப்பாடு 12:7–9; ஆல்மா 13:3–5; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 29:36–39; மற்றும் ஆபிரகாம் 3 மற்றும் கோட்பாடும் உடன்படிக்கைகளும் 138ன் எஞ்சிய பகுதிகள்.

## *சிருஷ்டிப்பு* 3

*மோசே 1:27–42; 2–3*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. மோசே 1:27–42. தேவனின் சிருஷ்டிப்புகளின் ஒரு தரிசனத்தை மோசே பார்க்கிறான், பூமியின் சிருஷ்டிப்பைப் பற்றிய ஒரு குறிப்பை எழுதும்படி கட்டளையிடப்படுகிறான்.

ஆ. மோசே 2:1–25; 3:1–14. அனைத்துக் காரியங்களின் சிருஷ்டிகர் தேவனே என்பதை மோசே அறிந்துகொள்கிறான்.

இ. மோசே 2:26–31; 3:7, 15–25. ஆண்களும் பெண்களும் தேவனின் சாயலில் படைக்கப்பட்டார்களென்பதை மோசே அறிந்துகொள்கிறான்.

- சிருஷ்டிப்பின் நோக்கத்தைப்பற்றி தேவன் என்ன வெளிப்படுத்தினார்? (மோசே 1:39; ஆபிரகாம் 3:24–25; 1 நெப்பி 17:36ஐயும் பார்க்கவும்).
- குறிப்பாக தேவனின் எந்த சிருஷ்டிப்புகள் உங்களுக்கு அழகாயிருக்கின்றன? சிருஷ்டிப்புகளின் அழகை ஒவ்வொரு நாளும் மிகக்கவனமாக கவனிப்பதால் எவ்வாறு நீங்கள் பயன் பெறுவீர்கள்?
- சிருஷ்டிப்புகள் எவ்வாறு தேவனைக் குறித்து “சாட்சி ”அளிக்கின்றன. (மோசே 6:63; ஆல்மா 30:44பார்க்கவும்).

கூடுதலான படிப்பு: ஆபிரகாம் 4–5; ஆதியாகமம் 1–2

## *“எனது பாவங்களினிமித்தம் எனது கண்கள் திறக்கப்பட்டன”* 4

*மோசே 4; 5:1–15; 6:48–62*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. மோசே 4; 5:10–11; 6:48–49, 55–56. ஏதேன் தோட்டத்திற்கு சாத்தான் வருகிறான், ஏவாளை ஏமாற்ற வகை தேடுகிறான். நன்மை தீமையை கண்டறியத்தக்கதான மரத்தின் கனியை ஏவாளும் ஆதாமும் புசிக்கிறார்கள் (4:5–12). வீழ்ந்துபோனதால் ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் (4:13-31). பின்னர் வீழ்ச்சியின் ஆசீர்வாதங்களில் ஆதாமும் ஏவாளும் களிகூருகிறார்கள் (5:10–11). வீழ்ச்சியின் விளைவுகளைப்பற்றி ஏனோக்கு போதிக்கிறான் (6:48–49, 55–56).

ஆ. மோசே 5:14–15; 6:50–54, 57–62. இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியால், உயிர்த்தெழுதலின் மூலம் சரீர மரணத்திலிருந்தும், விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் வரம், கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல் மூலம் ஆவிக்குரிய மரணத்திலிருந்தும் மனிதர்கள் காப்பாற்றப்படுகிறார்கள்.

இ. மோசே 5:1–9, 12. சரீர மனிதர்களாக ஆதாமும் ஏவாளும் வாழ்க்கையை

*ஆரம்பித்தார்கள். சுவிசேஷத்தின் சத்தியங்களை அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்தார்கள் (**5:1–4, 12**). ஒரே பேறான குமாரனின் பலியைப்போன்ற பலிகளை ஆதாம் கொடுக்கிறான் (**5:5–9**).*

- *ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மற்றும் நமக்கும் வீழ்ச்சியின் பலன்கள் எவை? (மோசே **4:22–29; 5:10–11; 6:48–49, 55–56;** 2 நெப்பி **2:22–23; 9:6;** ஆதியாகமம் **3:16–23** பார்க்கவும்).*
- *ஆதாம் மற்றும் ஏவாளின் வீழ்ச்சியைப் பற்றி தீர்க்கதரிசிகள் போதிக்கும் போது, இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியைப்பற்றியும்கூட வழக்கமாக அவர்கள் போதிக்கிறார்கள் (மோசே **5:10–15; 6:48–62;** 2 நெப்பி **9:6–10**). வீழ்ச்சியுடன் சேர்த்து பாவநிவர்த்தியையும்பற்றி போதிப்பது ஏன் முக்கியமானது?*
- *ஆதாம் கொடுத்த பலிகளின் நோக்கம் என்னவாயிருந்தது? (மோசே **5:7–9** பார்க்கவும்). அதே மாதிரியான என்ன நினைவுகூறுதல்கள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?*

*கூடுதல் படிப்பு: ஆதியாகமம் **2–3; 1** கொரிந்தியர் **15:20–22; 2** நெப்பி **2:5–30; 9:3–10;** ஏலாமான் **14:15–18;** கோட்பாடும் உடன்படிக்கைகளும் **19:15–19; 29:34–44;** விசுவாசப் பிரமாணம் **1:2**.*

---

## *“நீ நன்றாய்ச் செய்தால் நீ ஏற்றுக்கொள்ளப்படுவாய்”* **5**

*மோசே 5–7*

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. மோசே **5:16–41**. தேவனைவிட சாத்தானை காயீன் நேசித்து, கர்த்தருக்கு ஒரு பலிகொடுப்பதில் சாத்தானின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறான் (**5:16–19**). காயீனின் காணிக்கையை கர்த்தர் ஒதுக்குகிறார் மற்றும் மனந்திரும்ப காயீனுக்குக் கட்டளையிடுகிறார் (**5:20–25**). சாத்தானோடு காயீன் உடன்படிக்கை செய்து ஆபேலைக் கொன்றுபோடுகிறான் (**5:26–33**). காயீனை கர்த்தர் சபிக்கிறார், கர்த்தரின் சமுகத்திலிருந்து காயீன் வெளியே தள்ளப்படுகிறான் (**5:34–41**).*

*ஆ. மோசே **6:26–63**. மனந்திரும்புதலைப் பற்றிப் பிரசங்கிக்க, ஆதாமின் நான்காவது கொள்ளுப்பேரனான ஏனோக் கர்த்தரால் அழைக்கப்படுகிறான் (**6:26–36**). கர்த்தரின் கட்டளைக்கு ஏனோக்கு கீழ்ப்படிகிறான் (**6:37–63**).*

*இ. மோசே **7:13, 17–21, 23–47, 68–69**. ஏனோக்கின் விசுவாசம் மிகப்பெரியதாயிருந்ததால், மலைகள் இடம் பெயர்க்கப்பட்டு, நதிகள் தங்கள் தடங்களை மாற்றி, எல்லா தேசங்களும் பயந்தன (**7:13, 17**). பூமியிலுள்ள மக்களின் துன்மார்க்கங்களுக்காக கர்த்தரும் ஏனோக்கும் அழுதார்கள் (**7:23–47**). ஏனோக் பட்டணத்தின் மக்கள் கர்த்தருக்குள் ஏக சிந்தனையும் ஏக மனதுமாயியிருந்தனர், பட்டணம் முழுவதும் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது (**7:18–21, 68–69**).*

- *ஆபேல் எங்கே இருக்கிறான் என கர்த்தர் கேட்டபோது காயீன் எவ்வாறு பதிலளித்தான்? (மோசே **5:34** பார்க்கவும்). நமது சகோதரர்களின் காவலாளி என்றால் அர்த்தம் என்ன? ( **1** யோவான் **3:11, 17–18** பார்க்கவும்).*
- *ஏனோக்கையும் அவனது மக்களையும் சீயோனுக்கு ஏன் கர்த்தர் அழைத்தார்? (மோசே **7:18** பார்க்கவும்). “ஏக சிந்தனையும் ஏக மனதுமாயிருப்பது” என்றால் அர்த்தம் என்ன? கர்த்தருடன், நமது குடும்பங்களில்,*

*சபையில் ஏக சிந்தனையும் ஏக மனது மாயிருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?*

*கூடுதல் படிப்பு: மோசே* ***5:42–55; 6:10–23; 7:14–16, 59–64; 2*** *நெப்பி* ***2:25–27;*** *ஆதியாகமம்* ***4:1–16.***

## “நோவா . . .தன் குடும்பத்தை காக்க பேழையை உண்டுபண்ணினான்” 6

***மோசே 8:19–30; ஆதியாகமம் 6–9; 11:1–9***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. மோசே* ***8:19–30;*** *ஆதியாகமம்* ***6:5–22; 7:1–10.*** *சுவிசேஷத்தை நோவா பிரசங்கிக்கிறான், ஆனால் மக்கள் செவிகொடுக்கவில்லை (மோசே* ***8:19–25****). மக்களின் துன்மார்க்கத்தால் பூமியிலிருந்து எல்லா ஜீவராசிகளையும் அவர் அழிக் கப்போவதாக கர்த்தர் அறிவிக்கிறார் (மோசே* ***8:26–30;*** *ஆதியாகமம்* ***6:5–13****). ஒரு பேழையை கட்டும்ப டியும், அவனது குடும்பத்தையும் ஜீவிக் கிறவைகள் அனைத்திலும் ஒரு ஜோடி யையும் அதற்குள் கொண்டுபோகும்ப டியும் கர்த்தர் நோவாவுக்கு கட்டளை யிடுகிறார் (ஆதியாகமம்* ***6:14–22; 7:1–10****).*

*ஆ. ஆதியாகமம்* ***7:11–24; 8; 9:8–17. 40*** *பகல்களும்* ***40*** *இரவுகளுமாக மழை பெய்கிறது (****7:11–12****). பேழைக்குள் ளில்லாத எல்லா மக்களும் சிருஷ்டி களும் மரிக்கின்றன (****7:13–24****). தண்ணீர் வழிந்தபோது, நோவாவும், அவனது குடும்பமும், விலங்குகளும் பேழையைவிட்டுப் போய், நோவா, கர்த்தருக்குப் பலிகொடுக்கிறான் (****8:1–22****). நோவாவுடன் அவருக்கான உடன்படிக்கையின் அடையாளமாக கர்த்தர் வானவில்லை அமைக்கிறார் (****9:8–17****).*

*இ. ஆதியாகமம்* ***11:1–9.*** *வெள்ளத்திற்கு ஒரு சில தலைமுறைகளுக்குப்பின், பரலோகத்திற்கு ஒரு கோபுரத்தைக் கட்ட மக்கள் முயற்சி செய்கிறார்கள். அவர்களின் பாஷையை கர்த்தர் தாறு மாறாக்கி அவர்களை பூமி முழுவதிலும் சிதறடிக்கப்பண்ணுகிறார்.*

- *சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நோவாவை கர்த்தர் அழைத்தபோது உலகம் எந்த மாதிரியாயிருந்தது? (மோசே* ***8:20–22****). நோவாவின் காலத் திலுள்ள மக்களுக்கும் நமது காலத்தி லுள்ள மக்களுக்குமிடையில் என்ன ஒற்றுமைகளை நீங்கள் பார்க்கிறீர்கள்?*
- *நோவாவின் காலத்தில் அழிவை மக்கள் எவ்வாறு தவிர்த்தார்கள்? (மோசே* ***8:23–24****). ஆவிக்குரிய, சரீரத் திற்குரிய அழிவைத் தவிர்க்க தீர்க்கதரி சிகளுக்கு செவிகொடுத்தலும் அவர்க ளைப் பின்பற்றுதலும் எவ்வாறு நமக்கு தவுகிறது?*
- *நோவா ஏன் பேழையைக் கட்டினான்? (எபிரெயர்* ***11:7*** *பார்க்கவும்). நம்மைச் சுற்றியுள்ள தீமையிலிருந்து நம்மைப் பாதுகாக்க நமக்குதவ இன்று என்ன “பேழைகள்” நமக்கிருக்கின்றன? (இந்தக் கேள்விக்கு பதிலளிக்க, இளம் வயதினரின் பெலனுக்காக [34285] கைப்பிரதியின் குறிப்பை நீங்கள் பார்க்க விரும்பலாம்). இந்த “பேழை களில்” மற்றவர்கள் அடைக்கலம் காண நாம் எவ்வாறு உதவலாம்?*

*கூடுதல் படிப்பு: எபிரெயர்* ***11:7;*** *மோசே* ***7:32–36***

## *ஆபிரகாமின் உடன்படிக்கை* 7
***ஆபிரகாம் 1:1–4; 2:1–11; ஆதியாகமம் 12:1–8; 17:1–9***

*ஆபிரகாம் 1:1–4; 2:1–11; ஆதியாகமம் 12:1–8; 17:1–9. இந்தப் பகுதி வசனங்களில் தேவனின் ஆசீர்வாதங்களுக்காக நீதிமானாகவும் தகுதியுள்ளவனாகவுமிருக்க ஆபிரகாம் நாடுகிறான். தேவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து, ஒரு வாக்களிக்கப்பட்ட தேசத்தைப் பெறுகிற மற்றும் ஆசாரியத்துவத்தின் சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைப் பெறுகிற ஆபிரகாமுக்கு எண்ணிலடங்கா சந்ததியர் இருப்பார்களென வாக்குத்தத்தம் செய்கிறார்.*

*சபை அங்கத்தினர்கள் அனைவரும் ஆபிரகாமின் வித்துக்களே, அப்படியென்றால் ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கும் பொறுப்புகளுக்கும் நாம் அவனது சந்ததியரும் வாரிசுகளுமாயிருக்கிறோம் என அர்த்தம். சுவிசேஷ உடன்படிக்கைகளை நாம் கைக்கொள்ளும்போது இந்த மகத்தான ஆசீர்வாதங்கள் நமக்கு வருகிறது. நாம் செய்யும் முதல் உடன்படிக்கை ஞானஸ்நானம். பின்னர் ஆலயத்தில் ஆபிரகாமின் உடன்படிக்கையின் பரிபூரணத்தை நாம் பெறுகிறோம்.*

- *ஆபிரகாம் உடன்படிக்கையின் பகுதியாக ஆபிரகாமிற்கு கர்த்தர் என்ன ஆசீர்வாதங்களை வாக்களிக்கிறார்? (ஆபிரகாம் 2:6–11; ஆதியாகமம் 12:1–8; 17:1–9 பார்க்கவும்).*
- *ஆபிரகாம் உடன்படிக்கைக்கு வாரிசுகளாக நமது பொறுப்புகள் எவை? (ஆபிரகாம் 2:9, 11; ஆதியாகமம் 18:19 பார்க்கவும்).*

*கூடுதல் படிப்பு: கோட்பாடும் உடன்படிக்கைகளும் 132:10–24, 29–32; ஆதியாகமம் 15.*

## *ஒரு துன்மார்க்க உலகத்தில் நீதியாய் வாழுதல்* 8
***ஆதியாகமம் 13–14; 18–19***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. ஆதியாகமம் 13. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் எகிப்தில் வாழ்ந்த பிறகு, ஆபிரகாமும் அவனது குடும்பமும் கானானுக்குத் திரும்புகிறார்கள். எப்ரோனில் ஆபிரகாம் குடியேறுகிறான், அவனது ஒன்றுவிட்ட சகோதரன், சோதோமுக்கு அருகில் குடியேறுகிறான்.*

*ஆ. ஆதியாகமம் 14:1–2, 8–24. லோத்து சிறைபிடிக்கப்பட்டு ஆபிரகாமால் காப்பாற்றப்படுகிறான் (14:1–2, 8–16). மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசம பாகத்தைச் செலுத்தி, சோதோம் இராஜாவின் யுத்தத்தில் அடித்த கொள்ளைப் பொருட்களை ஏற்க மறுக்கிறான் (14:17–24).*

*இ. ஆதியாகமம் 18:16–33; 19:1–29. மக்களின் துன்மார்க்கத்தால் சோதோம் கொமோராவை அழிக்கப் போவதாக கர்த்தர் சொல்கிறார் (18:16–22). அங்கே நீதிமான்கள் வாழ்ந்துகொண்டிருப்பதை அவனால் கண்டுபிடிக்க முடிந்தால் பட்டணங்களை அழிக்காமலிருக்க கர்த்தருடன் ஆபிரகாம் கெஞ்சிக்கேட்கிறான் (18:23–33). சோதோமை விட்டுப்போகுமாறு லோத்து கட்டளையிடப்படுகிறான் (19:1–23). சோதோமையும் கொமோராவையும் கர்த்தர் அழிக்கிறார் (19:24–29).*

- *முதலில் லோத்து சோதோமுக்கு வெளியிலுள்ள “சமபூமியிலுள்ள பட்டணங்களில் வசிக்கிறான், ஆனால் அவன் சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்” (ஆதியாகமம் 13:12). பின்னர்*

*சோதோம் பட்டணத்திலேயே அவன் வசித்தான் (ஆதியாகமம் 14:12). சோதோமுக்கு நேரே கூடாரங்களை அமைக்கிறதற்கு ஆவிக்குரிய சமமான என்ன காரியங்களை நாம் செய்யலாம்?*

- *சோதோமையும் கொமோராவையும் கர்த்தர் அழிக்கப்போகிறார் என அவனுக்குத் தெரிந்தபோது ஆபிரகாம் என்ன கேட்டான்? (ஆதியாகமம் 18:23–32). அவர்களுக்குள் நீதிமான்களை அவரால் காணமுடிந்தால் பட்டணங்களை கர்த்தர் தப்புவிப்பார் என்ற உண்மையிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

*கூடுதல் படிப்பு: ஆதியாகமம் 12; 19:9–15.*

---

## “தேவன் தமக்குத் தேவையான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்” 9

***ஆபிரகாம் 1; ஆதியாகமம் 15–17; 21–22***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. ஆபிரகாம் 1:1, 5–20. ஒரு இளம் வாலிபனாக, பார்வோனின் பொய்யான ஆசாரியர்களால் ஆபிரகாம் குற்றவாளியாக்கப்படுகிறான். அவனைப் பலிகொடுக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள், ஆனால் யேகோவாவால் அவன் காப்பாற்றப்படுகிறான்.*

*ஆ. ஆதியாகமம் 15–17; 21. அவனது வாழ்வின் பிற்பகுதியில் ஆபிரகாமுக்கு ஒரு சந்ததி வாக்களிக்கப்படுகிறது (15:1–6). ஆபிரகாமுக்கு மனைவியாக ஆகாரை சாராள் கொடுக்கிறாள்; ஆகார் இஸ்மவேலைப் பெறுகிறாள் (16:1–16). அநேக தேசங்களுக்கு ஆபிரகாம் பிதாவாயிருப்பான் என்ற வாக்குத்தத்தத்துடன் ஆபிரகாமுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையைப்பற்றி மீண்டும் தேவன் பேசுகிறார் (17:1–14). தொடருகிற உடன்படிக்கையின் மூலமாக ஈசாக்கின் பிறப்பு அறிவிக்கப்படுகிறது (17:16–22). சாராள் ஈசாக்கைப் பெற்றெடுக்கிறாள் (21:1–12).*

*இ. ஆதியாகமம் 22. ஈசாக்கைப் பலிகொடுக்கும்படி ஆபிரகாமிற்கு தேவன் கட்டளையிடுகிறார் (22:1–2). ஈசாக்கை பலிகொடுக்க ஆபிரகாம் ஆயத்தமாகிறான், ஆனால் அவனுக்குப் பதிலாக பலிகொடுக்க ஒரு ஆட்டை தேவன் கொடுக்கிறார் (23:3–19).*

*குறிப்பு: ஆபிராமின் பெயரை ஆபிரகாம் என்று கர்த்தர் மாற்றுவதையும் சாராயின் பெயரை சாராள் என மாற்றுவதையும் பற்றி ஆதியாகமம் 17வது அதிகாரம் கூறுகிறது (வசனங்கள் 5, 15 பார்க்கவும்). இந்தப் பகுதி முழுவதும் ஆபிரகாம் மற்றும் சாராள் என்ற பெயர்கள் பயன்படுத்தப்படுகிறது.*

- *ஈசாக்கைப் பலிகொடுக்க தேவன் கட்டளையிட்டதற்கு ஆபிரகாம் எவ்வாறு செயல்பட்டான்? (ஆதியாகமம் 22:2–3 பார்க்கவும்). இந்த சூழ்நிலைக்கு ஈசாக்கு எவ்வாறு செயல்பட்டான்? (ஆதியாகமம் 22:3–10 பார்க்கவும்). விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும்பற்றி ஆபிரகாம் மற்றும் ஈசாக்கிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? (எபிரெயர் 11:17–19; யாக்கோபு 2:21–23 பார்க்கவும்).*
- *ஈசாக்கைப் பலிகொடுக்க ஆபிரகாமின் விருப்பம் தனது ஒரே பேறான குமாரனைப் பலிகொடுக்க பரலோகப் பிதாவின் விருப்பத்திற்கு ஒப்பாயிருக்கிறது (யாக்கோபு 4:5; ஆதியாகமம் 22:8–13). ஆபிரகாமின் அனுபவத்திற்கும் பரலோகப் பிதாவின் அனுபவத்திற்குமிடையில் உள்ள சில ஒற்றுமைகள் என்ன? மிகப்பெரிய வித்தியாசம் எது?*

*கூடுதல் படிப்பு: எபிரெயர் 11:8–19; யாக்கோபு 2:21–23; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 132:34–36.*

## சேஷ்டபுத்திரபாகத்தின் ஆசீர்வாதங்கள்; உடன்படிக்கையில் திருமணம்

# 10

***ஆதியாகமம் 23–29***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. ஆதியாகமம் 24. ஈசாக்குக்கு ஒரு தகுதியான மனைவியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உடன்படிக்கைக்குள் திருமணம் செய்வதன் முக்கியத்துவத்தை ஆபிரகாம் வலியுறுத்துகிறான்.

ஆ. ஆதியாகமம் 25:20–34. தனக்கு பிறக்கப்போகும் இரட்டை மகன்கள் குறித்த ஒரு வெளிப்படுத்தலை ராகேல் பெறுகிறாள் (25:22–23). இந்த மகன்கள் வளர்ந்தபோது, ஏசா தனது சேஷ்ட புத்திரபாகத்தை யாக்கோபுக்கு விற்கிறான் (25:29–34).

இ. ஆதியாகமம் 26–29. ஈசாக்குக்கும் அவனது சந்ததியருக்கும் ஆபிரகாம் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டன (26:1–5). உடன்படிக்கைக்கு வெளியே ஏசா திருமணம் செய்கிறான் (26:34–35). ஜாதிகள் மேலும் தேசங்கள் மேலும் ஆளுகை செய்ய ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதிக்கிறான் (27:1–46). ஆபிரகாம் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை யாக்கோபுமீது ஈசாக்கு அறிவித்து ஒரு தகுதியான மனைவியைக் கண்டுபிடிக்க அவனை தொலைவிலே அனுப்புகிறான் (28:1–10). உடன்படிக்கைக்குள் லேயாளையும் ராகேலையும் யாக்கோபு திருமணம் செய்கிறான் (29:1–30).

- நித்திய மதிப்பின் காரியங்களைவிட உடனடியாக திருப்தியளிக்கிற காரியங்களை தேர்ந்தெடுத்த ஏசாவைப்போல நம்மில் சிலர் எவ்வாறு தவறுகளைச் செய்கிறோம்?
- உடன்படிக்கையில் திருமணம் செய்துகொள்ள அவனது முயற்சிகளிலிருந்து யாக்கோபைப்பற்றி நாம் என்ன அறிந்துகொள்கிறோம்? (ஆதியாகமம் 28:1–5; 29:1–28பார்க்கவும்).
- ஆலயத்தில் திருமணம் செய்துகொள்ள ஆயத்தப்பட என்ன சில காரியங்களை பிள்ளைகளும் வாலிபர்களும் செய்யலாம்? இரண்டு பேர் ஆலயத்தில் திருமணம் செய்துகொண்டபின், அவர்கள் உண்மையிலேயே ஒரு நித்திய திருமணத்தைச் செய்துகொண்டார்கள் என்பதை நிச்சயப்படுத்த அவர்கள் என்ன செய்யவேண்டும்?

## “இத்தனை பெரிய பொல்லாங்கை நான் எப்படிச் செய்வேன்?”

# 11

***ஆதியாகமம் 34; 37–39***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. ஆதியாகமம் 37. யாக்கோபுவின் பதினோராவது மகனான யோசேப்பு தனது சகோதரர்களால் வெறுக்கப்பட்டு அடிமையாக விற்கப்பட்டான்.

ஆ. ஆதியாகமம் 39. ஒரு அடிமையாக யோசேப்பு முன்னேற்றமடைந்து ஒழுக்கக்கேட்டின் குற்றவாளியாக சிறைக்கு அனுப்பப்படுகிறான் (39:1–20). மற்ற சிறைக் கைதிகளுக்கு மேலாக சிறைக் காவல்காரன் யோசேப்புக்கு பொறுப்பளிக்கிறான் (39:21–23).

இ. ஆதியாகமம் 34:1–12; 35:22; 38:1–30. யாக்கோபுவின் குடும்பத்தின்மீது, ஒழுக்கக்கேட்டின் பாவம் எதிரான விளைவுகளை ஏற்படுத்துகிறது (34:1–12; 35:22; 38:1–30).

யாக்கோபுவின் மனைவிமார்கள் அவனுக்கு பன்னிரண்டு மகன்களைப் பெற்றுக்கொடுத்து, அவர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் ஆரம்பங்களாகிறார்கள் (யாக்கோபுவின் பெயரை கர்த்தர் இஸ்ரவேல் என மாற்றினார்; ஆதியாகமம் 32:28 பார்க்கவும்). யோசேப்பு, யாக்கோபுவின் பதினோராவது மகனாயிருந்தான்; யாக்கோபுவுக்கும் ராகேலுக்கும் பிறந்த மூத்த மகனாக யோசேப்பு சேஷ்டபுத்திரபாகத்தைப் பெற்றான், யாக்கோபுவுக்கும் லேயாளுக்கும் பிறந்த மூத்த மகனான ரூபன் தனது அநீதியினிமித்தம் அதை இழந்துபோனான் (1 நாளாகமம் 5:1–2).

- போத்திபாரின் மனைவி, யோசேப்பை பாவம் செய்ய தூண்டியபோது அவன் என்ன செய்தான்? (ஆதியாகமம் 39:11–12 பார்க்கவும்). நாம் சோதிக்கப்படும்போது யோசேப்பின் எடுத்துக்காட்டை எவ்வாறு நாம் பின்பற்ற முடியும்?
- கெட்ட அனுபவங்களையும் சூழ்நிலைகளையும் நன்மையானவைகளாக மாற்றுவதைப்பற்றி யோசேப்பிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? (ஆதியாகமம் 39:20–23 பார்க்கவும்; ரோமர் 8:28ஐயும் பார்க்கவும்).

கூடுதல் படிப்பு: ஆதியாகமம் 34:13–31

---

## “நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் பலுகப்பண்ணினார்” 12

*ஆதியாகமம் 40–45*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. ஆதியாகமம் 40–41. சிறைச்சாலையில் பார்வோனின் வேலைக்காரர்களின் சொப்பனங்களுக்கு சரியான அர்த்தத்தை யோசேப்பு கொடுக்கிறான். பின்னர் கால்நடைகள் மற்றும் தானியங்களைப்பற்றிய பார்வோனின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்கிறான். பார்வோனின் கீழ் எகிப்து முழுவதற்கும் ஆட்சியாளனாக யோசேப்பு நியமிக்கப்பட்டு ஒரு பஞ்சத்தை எதிர்கொள்ள மக்களை ஆயத்தப்படுத்துகிறான்.

ஆ. ஆதியாகமம் 42–45. தானியம் வாங்க இரண்டுமுறை எகிப்துக்கு தனது மகன்களை யாக்கோபு அனுப்புகிறான். தனது சகோதரர்களுக்கு தான் யார் என்பதை யோசேப்பு வெளிப்படுத்தி அவர்களை அவன் மன்னிக்கிறான், அவர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்தார்கள்.

- யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்குச் செய்ததைப்போல, யாரோ ஒருவர் நமக்கு தவறிழைக்கும்போது நாம் என்ன செய்யவேண்டுமென உலகம் சொல்கிறது? நாம் என்ன செய்யவேண்டுமென கர்த்தர் சொல்கிறார்? (கோ.உ 64:8–11 பார்க்கவும்). உங்களை மோசமாக நடத்துபவர்களை நீங்கள் அன்பாய் நடத்தும்போது நீங்கள் எப்படி ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள்? நாம் எவ்வாறு அதிகமாய் மன்னிப்பவர்களாக ஆகமுடியும்?
- அவனுக்கு ஒரு சோதனையாயிருந்த எகிப்தில் யோசேப்பின் சிறையிருப்பு அவனுக்கும் அவனது குடும்பத்திற்கும் எகிப்து முழுவதற்கும் எவ்வாறு ஒரு ஆசீர்வாதமானது? (ஆதியாகமம் 45:4–8 பார்க்கவும்). முதலில் எதிரானதைப்போலத் தோன்றி பின்னர் ஆசீர்வாதங்களாக மாறிய என்ன அனுபவங்கள் உங்களுக்கிருக்கிறது?

கூடுதல் படிப்பு: 2 நெப்பி 2:2; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 64:8–11; 122:5–9.

# *அடிமைத்தனம், பஸ்கா பண்டிகை மற்றும் யாத்திரை* **13**

*யாத்திராகமம் 1–3; 5–6; 11–14*

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. யாத்திராகமம் **1–3.** எகிப்தியர்களால் இஸ்ரவேலர்கள் அடிமைகளாக்கப்பட்டனர் **(1:1–14).** இஸ்ரவேலர்களுக்குப் பிறக்கப்போகும் எல்லா பிள்ளைகளும் கொல்லப்படவேண்டுமென பார்வோன் கட்டளையிடுகிறான் **(1:15–22).** மோசே பிறந்து பார்வோனின் மகளால் வளர்க்கப்படுகிறான் **(2:1–10).** எரிகிற முட்புதரிலே மோசேக்குக்கு கர்த்தர் தோன்றி, அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலை விடுவிக்க அவனை அழைக்கிறார் **(3:1–22).***

*ஆ. யாத்திராகமம் **5–6.** இஸ்ரவேலை விடுவிக்குமாறு மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் கேட்கிறார்கள் ஆனால் பார்வோன் மறுத்து மக்கள் மேல் அதிக பாரத்தை சுமத்துகிறான் **(5:1–23).** ஆபிரகாமோடு கர்த்தர் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதாக கர்த்தர் வாக்களிக்கிறார் **(6:1–8).***

*இ. யாத்திராகமம் **11–13.** எகிப்தின் மேல் அநேக வாதைகளை அனுப்பியபின், ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தலைப்பிள்ளை மரிக்கப்போகிற மற்றுமொரு வாதையை அவர்கள் மேல் அனுப்பப்போவதாக கர்த்தர் வாக்களிக்கிறார் **(11:1–10).** அந்த வாதையிலிருந்து இஸ்ரவேலை பாதுகாக்கப்போகிற பஸ்கா பண்டிகையின் ஆயத்தத்திற்கு கர்த்தர் மோசேக்கு அறிவுரை வழங்குகிறார் **(12:1–20).** எகிப்தின் தலைப்பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள் **(12:29–30).** அவனது மக்களை எகிப்திலிருந்து கூட்டிக்கொண்டுபோக பார்வோன் மோசேயிடம் சொல்கிறான், இஸ்ரவேலர்கள் அங்கிருந்து போகிறார்கள் **(12:31–42).** தங்களின் விடுதலையின் ஒரு நினைவுகூருதலாக, வருங்காலத்தில் புளிப்பில்லாத அப்பத்தின் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கு இஸ்ரவேல் மக்களுக்கு மோசே கூருகிறான் **(13:1–16).** பகலில் ஒரு மேகஸ்தம்பத்திலும் இரவில் ஒரு அக்கினிஸ்தம்பத்திலும் இஸ்ரவேலின் பாளையத்திற்கு முன்பாக கர்த்தர் போகிறார் **(13:17–22).***

*ஈ. யாத்திராகமம் **14.** பார்வோனும் அவனது சேனையும் இஸ்ரவேலர்களை பின்தொடர்ந்து போனார்கள் **(14:1–9).** மக்கள் பயப்படுகிறார்கள், உதவிக்காக கர்த்தரிடம் மோசே மன்றாடுகிறான் **(14:10–18).** இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தை கட்டாந்தரை வழியே கடந்துபோனார்கள்; பார்வோனின் மனிதர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து அமிழ்ந்துபோனார்கள் **(14:19–31).***

- *கடைசி இராப்போஜனத்தில், பஸ்காவுக்குப் பதிலாக திருவிருந்தை இரட்சகர் நிர்வகித்தார் (மத்தேயு **26:19; 26–28**). பஸ்காவுக்கும் திருவிருந்திற்குமிடையில் என்ன ஒற்றுமைகளிருக்கின்றன (யாத்திராகமம் **12:14; 13:9–10;** கோ.உ **20:75–79** பார்க்கவும்)*
- *பார்வோனின் சேனையை அவர்கள் பார்த்து, அவர்களின் விசுவாசம் வீழ்ந்தபோது இஸ்ரவேல் மக்களிடம் மோசே என்ன கூறினான் (யாத்திராகமம் **14:13–14** பார்க்கவும்). நாம் பயத்தால் நிரம்பும்போது நாம் தைரியமாயிருக்க போதுமான பலமான விசுவாசத்தை நாம் எவ்வாறு வளர்க்க முடியும்?*
- *எகிப்தின் சேனை முன்னேறி வந்ததலிருந்து கர்த்தர் எவ்வாறு இஸ்ரவேல் மக்களை காப்பாற்றினார்? (யாத்திராகமம் **14:21–31** பார்க்கவும்). சோதனையின் காலங்களில் இந்த கதை எவ்வாறு நமக்கு உதவமுடியும்?*

*கூடுதல் படிப்பு: யாத்திராகமம் **4; 7–10; 15.***

## *“நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்”* 14
### *யாத்திராகமம் 15–20; 32–34*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. யாத்திராகமம் 15:22–27; 16:1–31; 17:1–7. அவர்களுக்கு பசியும் தாகமும் எடுத்தபோது இஸ்ரவேல் மக்கள் முணுமுணுத்தார்கள்; கர்த்தர் அவர்களுக்கு தண்ணீரையும், மன்னாவையும், காடையையும் கொடுத்தார்.

ஆ. யாத்திராகமம் 17:8–13; 18:13–26. அமலேக்கியர்கள் இஸ்ரவேலை தாக்குகிறார்கள். மோசே தனது கைகளை மேலே தூக்கிவைத்திருக்கும்போது இஸ்ரவேலர் வெற்றியடைந்துகொண்டிருந்தார்கள், மோசே களைப்படைந்து தனது கைகளை கீழே போடும்போது அமலேக்கியர்கள் வெற்றியடைந்தார்கள். ஆரோனும் ஊரும் மோசேயின் கைகளை உயரே தூக்கி பிடித்தார்கள். யுத்தத்தில் இஸ்ரவேலர்கள் வென்றார்கள் (17:8–13). அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து நியாயாதிபதிகளை மோசே நியமிக்கிறான் (18:13–26).

இ. யாத்திராகமம் 19–20. சீனாய் மலையில் மோசேயைக் கர்த்தர் சந்தித்து இஸ்ரவேலுக்கு பத்து கற்பனைகளைக் கொடுக்கிறார்.

ஈ. யாத்திராகமம் 32–34. கர்த்தரிடமிருந்து அறிவுரைகள் அடங்கிய கற்பலகைகளை மோசே பெறுகிறான், ஆனால் ஒரு பொன் கன்றுக்குட்டியை மக்கள் வணங்கிக்கொண்டிருந்ததை அவன் கண்டபோது கற்பலகைகளை உடைக்கிறான் (31:18; 32:1–24). மெல்கிசேதேக் ஆசாரியத்துவத்தின் நியமங்களை இஸ்ரவேலிடமிருந்து கர்த்தர் எடுத்துவிட்டு, குறைந்த பிரமாணமான மோசேயின் நியாயப்பிரமாணத்தை அவர்களுக்குக் கொடுக்கிறார். புதிய கற்பலகைகளை மோசே இழைக்கிறான், ஆனால் “பரிசுத்த ஆசாரியத்துவத்தின் நித்திய உடன்படிக்கையின் வார்த்தைகள்” புதிய கற்பலைகைகளில் சேர்க்கப்படவில்லை (யாத்திராகமம் 34:1–5). மோசேயின் நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய மக்கள் உடன்படிக்கை செய்தார்கள் (34:10–35).

- மன்னா எவ்வாறு கிறிஸ்துவின் பிரதிபலிப்பாயிருக்கிறது? (யோவான் 6:35 பார்க்கவும்). கிறிஸ்துவின் ஜீவஅப்பம் எவ்வாறு மன்னாவிலிருந்து வித்தியாசமானதாயிருக்கிறது? (யோவான் 6:48–51 பார்க்கவும்). கிறிஸ்துவின் ஜீவ அப்பத்தில் எவ்வாறு நாம் தினசரி பங்கேற்கலாம்?
- இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருந்தால் அவர்களுக்கு கர்த்தர் என்ன வாக்களித்தார்? (யாத்திராகமம் 19:3–6 பார்க்கவும்). இந்த வாக்களிப்புகள் இன்று நமக்கு எவ்வாறு பொருந்துகிறது?
- இஸ்ரவேல் மக்களுக்குக் கர்த்தர் ஏன் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார்? (கலாத்தியர் 3:23–24; மோசியா 13:29; ஆல்மா 25:15–16; கோ.உ 84:19–27 பார்க்கவும்). இந்த நியாயப்பிரமாணம் எவ்வாறு இஸ்ரவேல் மக்களை பரிசுத்தமாக்குகிறது, எவ்வாறு அவர்களை கிறிஸ்துவண்டைக் கொண்டுவருகிறது? (மோசியா 13:30; ஆல்மா 34:14–15 பார்க்கவும்).
- மோசேயின் நியாயப்பிரமாணம் எப்போது நிறைவேற்றப்பட்டது? (3 நெப்பி 15:4–10 பார்க்கவும்). இப்போது, மோசேயின் நியாயப்பிரமாணத்தின் ஒரு முக்கிய பகுதியாக இருந்த பிராணிகளைப் பலிகொடுத்தல் இனியும் தேவையாயிருக்கவில்லை, எந்தப் பலியைக் கொடுக்க அவர் நம்மைக் கேட்கிறார்? (3 நெப்பி 9:19–22 பார்க்கவும்). ஒரு நொறுங்குண்ட இருதயத்தையும் ஒரு நருங்குண்ட ஆவியையும் கொடுத்தல் என்றால் என்ன அர்த்தம்?

கூடுதல் படிப்பு: சங்கீதம் 78; 1 கொரிந்தியர் 10:1–11; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 84:19–27.

## “நீ தேவனைப் பார்த்து பிழைத்திரு” 15

***எண்ணாகமம் 11–14; 21:1–9***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. எண்ணாகமம் **11.** மன்னாவைப்பற்றி இஸ்ரவேலர்கள் முறையிட்டு இறைச்சியை உண்ண விருப்பமாயிருந்தார்கள் **(11:1–9).** கர்த்தரால் அறிவுறுத்தியபடி, அவனுக்குதவ **70** மூப்பர்களை மோசே கூட்டிச்சேர்த்தான் **(11:10–17, 24–30).** அளவுக்கதிகமான காடைகளை அவர்களுக்கு அனுப்பி, இறைச்சிக்கான இஸ்ரவேலர்களின் விருப்பத்திற்கு கர்த்தர் பதிலளித்து, அவர்களின் பேராசையாலும், அற்பசிற்றின்பத்தாலும் அவர்களை ஒரு வாதையால் வாதித்தார் **(11:18–23, 31–35).**

ஆ. எண்ணாகமம் **12.** மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசினார்கள் **(12:1–3).** அவர்களின் முணுமுணுப்புக்காக மிரியாமையும் ஆரோனையும் கர்த்தர் கடிந்துகொண்டார் **(12:4–16).**

இ. எண்ணாகமம் **13–14.** கானான் தேசத்தைக் கண்டுபிடிக்குமாறு **12** மனிதர்களுக்கு மோசே கட்டளையிடுகிறான் **(13:1–20).** அந்த தேசத்தின் வளங்களைப்பற்றி நல்ல அறிக்கைகளுடன் அவர்கள் திரும்பவந்தார்கள், ஆனால் யோசுவாவையும் காலேப்பையும் தவிர அனைவரும் அங்கு வாழ்ந்துகொண்டிருந்தவர்களுக்குப் பயந்துபோய் எகிப்திற்கு திரும்பப்போக விரும்பினார்கள் **(13:21–14:10).** யோசுவாவையும் காலேப்பையும் தவிர வயதுவந்த தலைமுறையிலுள்ள அனைவரும் மரிக்கும்வரை விசுவாசமில்லாத, முறையிடுகிற இஸ்ரவேலர்கள் **40** ஆண்டுகளாக வனாந்தரத்தில் அலைந்து திரிவார்களென மோசேக்கு கர்த்தர் கூறுகிறார் **(14:11–39).**

ஈ. எண்ணாகமம் **21:1–9.** இஸ்ரவேலர்களுக்கு எதிராக வந்த கானானியரை அவர்கள் அழித்துப்போட்டார்கள். **(21:1–3).** இஸ்ரவேலர்களின் தொடர்ந்த முறையிடுதலால் தண்டனையாக கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை கர்த்தர் அனுப்புகிறார் **(21:4–6).** ஒரு வெண்கலச் சர்ப்பத்தை மோசே உண்டுபண்ணி, அதை ஒரு கம்பத்தின்மேல் கட்டிவைத்து, அதை அவர்கள் நோக்கிப் பார்த்தால் அவர்கள் பிழைப்பார்களென மக்களுக்குக் கூறுகிறான் **(21:7–9).**

- மன்னாவைப்பற்றி இஸ்ரவேலர்கள் ஏன் முறையிடுகிறார்கள்? (எண்ணாகமம் **11:4–6** பார்க்கவும்). நமது தேவைக்கும் மேலாக நாம் ஆசைப்படுவதின் அபாயங்கள் எவை?
- பிழைக்கும்படியாக ஒரு வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்க்க இஸ்ரவேல் மக்களுக்கு தேவைப்பட்டதைப் போல, நித்திய ஜீவனை அடைய இயேசு கிறிஸ்துவை நாம் நோக்கிப் பார்க்கவேண்டும் (ஆல்மா **37:46–47;** ஏலாமான் **8:15).** கிறிஸ்துவை நோக்கிப்பார்த்தல் என்றால் அர்த்தம் என்ன?

கூடுதல் படிப்பு: யோவான் **3:14–16; 1** நெப்பி **17:41;** ஆல்மா **33:18–22; 37:46–47;** ஏலாமான் **8:13–15.**

## “கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது” 16

***எண்ணாகமம் 22–24; 31:1–16***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. எண்ணாகமம் **22:1–21.** இஸ்ரவேலர்கள் அணுகிவருவதைக் கண்ட மோபாவின் இராஜாவான பாலாக் மிகப்பயந்தான். மோவாப்புக்கு வந்து இஸ்ரவேலரை சபித்தால் பிலேயாமுக்கு சன்மானங்களைக் கொடுப்ப

*தாக அவன் சொன்னான். அதை மறுக்குமாறு கர்த்தர் பிலேயாமுக்கு கட்டளையிட்டு பிலேயாம் அதற்குக் கீழ்ப்படிகிறான் (22:1–14). மோவாப்புக்கு வந்து இஸ்ரவேலைச் சபித்தால் பிலேயாமுக்கு கூடுதலான கனத்தையும் ஆஸ்தியையும் கொடுப்பதாக பாலாக் சொன்னான். அவன் விரும்பினால் போகும்படியும் ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட தேவனின் வார்த்தைகளை மட்டுமே அவன் பேசவேண்டுமெனவும் பிலேயாமுக்குக் கர்த்தர் கூறுகிறார் (22:15–21). போவதற்கு பிலோயாம் தீர்மானிக்கிறான்.*

ஆ. *எண்ணாகமம் 22:22–35. பாலக்கிடமிருந்து சில சன்மானங்களை எதிர்பார்க்கிறான் என்பதை அறிந்தவராக மோவாப்புக்கு போனதில் தேவன் பிலேயாமோடு கோபமடைகிறார். அவன் போகிற வழியில் அவனது கழுதையும் ஒரு தூதனும் அவனோடு பேசியபோது, தேவனைக் கோபமடையச் செய்ததற்கான அபாயங்களைப்பற்றி பிலேயாம் அறிந்துகொள்கிறான்.*

இ. *எண்ணாகமம் 22:36–24:25. இஸ்ரவேலைச் சபிக்கும்படி மூன்று முறை பிலேயாமை பாலாக் கேட்கிறான், ஆனால் பிலேயாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொரு முறையும் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறான் (22:36–24:9). பின்னர் அவன் மோவாபை சபித்து இயேசு கிறிஸ்துவைப்பற்றி தீர்க்கதரிசனமுரைக்கிறான் (24:10–25).*

ஈ. *எண்ணாகமம் 31:1–16. மீதியானியர்களை இஸ்ரவேல் அழித்து பிலேயாமை கொன்றுபோடுகிறார்கள். இஸ்ரவேலர்களை பாவத்திற்குள்ளாக்க ஏமாற்றும்படி மீதியானியர்களுக்கு பிலேயாம் ஆலோசனை கூறினான் என மோசே விவரிக்கிறான் (பிலேயாமின் ஆலோசனையின் விளைவுகளைப்பற்றி எண்ணாகமம் 25:1–3ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக இஸ்ரவேலை பிலோயாமால் சபிக்க முடியாவிட்டாலும்கூட பாலாக்கிடமிருந்து அவன் ஒரு சன்மானத்தைப்பெற மிகஆவலுள்ளவனாக இருந்ததாகத் தோன்றுவதால், தேவனின் பாதுகாப்பை இஸ்ரவேலர்கள் இழந்து போகக் காரணமாயிருக்க, அவர்களை பாவம் செய்ய தூண்டி அவன் ஆலோசனையளித்தான்).*

- *இஸ்ரவேலைச் சபிக்க மோவாப்பிற்குப் போவதற்காக அவனுக்குச் சன்மானங்கள் கிடைக்குமென்பதற்கு பிலேயாம் எவ்வாறு பிரதியுத்தரமளித்தான்? (எண்ணாகமம் 22:5–14 பார்க்கவும்). தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருப்பதற்குப் பதிலாக சிலசமயங்களில் சன்மானங்கள் என்றழைக்கப்படுகிறவை நமக்கு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது?*
- *மோவாப்புக்கு போகிற வழியில் அவனது கழுதையை முன்னேறிச் செல்ல மூன்று முறை பிலேயாம் முயற்சித்தான் (எண்ணாகமம் 22:22–30). எந்த வழியில் இது கர்த்தருடன் பிலேயாமுக்குள்ள உறவைப்போலிருக்கிறது? தேவனின் சித்தத்திற்கு அல்லது பெற்றோர் அல்லது தலைவர்களின் நீதியான ஆலோசனைக்கு ஒப்புக்கொடுப்பதைவிட அவர்கள் விரும்பியதைச் செய்வதில் மிகவும் பிடிவாதமாக இருக்க முயற்சிக்கிற சில தற்கால தனிப்பட்டவர்கள் மற்றும் பிரிவினர் யாவர்?*
- *பிலேயாமை புதிய ஏற்பாட்டின் மூன்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் (2 பேதுரு 2:15–16; யூதா 1:11; வெளிப்பாடு 2:14). அவனைப்பற்றிய அவர்களின் கருத்துக்கள் என்ன? பிலேயாமின் கதையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் எவை?*

# “மறவாதபடிக்கு நீ எச்சரிக்கையாயிரு” 17

*உபாகமம் 6; 8; 11; 32*

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. உபாகமம் 6:1–9; 11:18–21. இஸ்ரவேலர்கள் தங்களின் உடன்படிக்கைகளை நினைவுகூருவதற்கு அவர்களுக்குதவ மோசே அறிவுரையளிக்கிறான். அவனது வார்த்தைகளை தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்க பெற்றோருக்கு அவன் அறிவுறுத்துகிறான்.*

*ஆ. உபாகமம் 6:10–12; 8:1–20. இஸ்ரவேலர்களுக்கான தேவனின் ஆசீர்வாதங்களைப்பற்றி மோசே அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். தேவனின் கற்பனைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியாமல் போனால், அவரை நினைவுகூறாமல் போனால் அவர்கள் அழிந்துபோவார்களென அவர்களுக்கு அவன் எச்சரிக்கை கொடுக்கிறான்.*

*இ. உபாகமம் 32:1–4, 15–18, 30–40, 45–47. தங்கள் இரட்சிப்பின் கன்மலையைப்பற்றி (இயேசு கிறிஸ்து) அவர்கள் நினைவில் வைத்திருக்க இஸ்ரவேலர்களுக்கு மோசே ஆலோசனையளிக்கிறான்.*

*40 ஆண்டுகளாக, வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களை சோதித்து, கடிந்துகொண்டு, போதித்தபின், வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் அவர்கள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்களென கர்த்தர் சொன்னார். ஆனால் முதலில் அவர்களுக்கு அவரிடம் சில முக்கியமான அறிவுரைகளிருந்தன. உபாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற இந்த அறிவுரைகளை மூன்று பிரசங்கங்களாக மோசே அறிவித்தான்.*

- *வேதவசனப் பகுதிகளை அவர்களின் கண்களுக்கிடையிலும், தங்கள் கைகளிலும், தங்கள் வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், அவர்களின் வாயிற்கதவுகளிலும் வைத்திருக்க மக்களை மோசே கேட்டது ஏன் என நீங்கள் நினைக்கிறீர்கள்? அத்தகைய தொடர்ந்த நினைவுகூருதல்கள் எவ்வாறு நமது செயல்களைப் பாதிக்கிறது? கர்த்தரையும், அவரது வார்த்தைகளையும், அவரோடு நமக்குள்ள உடன்படிக்கைகளையும் நமக்கு நினைவூட்ட நமது வீடுகளில் நாம் என்ன செய்யலாம்? நமது சுவர்களிலுள்ள படங்கள், நாம் படிக்கிற புத்தகங்கள், நாம் பார்க்கிற திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் கர்த்தரை நமக்கு நினைவுபடுத்துகிறதா, அல்லது உலகத்தைப்பற்றிய ஆசைகளுக்கு அவைகள் நமக்கு ஆலோசனையளிக்கிறதா?*

- *உபாகமம் 6:10–12 மற்றும் 8:1–20வது வசனத்தில் மோசேயின் முக்கிய செய்திகள் எவை? கர்த்தரை மறந்துபோகுதல் என்றால் என்ன? ( உபாகமம் 8:11 பார்க்கவும்). அவரை மறந்துபோவதன் விளைவுகள் எவை? ( உபாகமம் 8:19 பார்க்கவும்).*

- *உபாகமம் 32:3–4வது வசனங்களில் பேசப்படுகிற கன்மலை யார்? சிலசமயங்களில் இயேசு கிறிஸ்து கன்மலை என அழைக்கப்படுவது ஏன் என நீங்கள் நினைக்கிறீர்கள்? (ஏலாமான் 5:12). கன்மலையின் மேல் கட்டுதல் என்றால் என்ன? ( உபாகமம் 32:46–47; மத்தேயு 7:24–27; கோ.உ 50:44 பார்க்கவும்).*

*கூடுதல் படிப்பு: உபாகமம் 4; 7:1–4; 13:1–8; 34.*

## *“பலங்கொண்டு திடமனதாயிரு”* 18
*யோசுவா 1–6; 23–24*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. யோசுவா 1. மோசேயைத் தொடர்ந்து தலைமை தாங்க யோசுவாவை கர்த்தர் அழைக்கிறார். இஸ்ரவேலர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ள யோசுவா அவர்களை ஆயத்தப்படுத்து கிறான்.

ஆ. யோசுவா 3–4; 6. கட்டாந்தரை வழியாக யோர்தான் நதியை இஸ்ரவேலர்கள் கடந்து, அவர்கள் கடந்துவந்ததன் நினைவுகூருதலாக 12 கற்களை அங்கே நடுகிறார்கள். இஸ்ரவேலர்களின் விசுவாசத்தின் மூலமாக எரிகோ அழிக்கப்பட்டது.

இ. யோசுவா 23:24:14–31. கர்த்தரை சேவிப்பதாக யோசுவாவும் அவனது மக்களும் உடன்படிக்கை செய்கிறார்கள்.

இஸ்ரவேலர்கள் அறிந்த ஒரு முழு தலைமுறைக்கும் மோசே மட்டுமே தலைவன். ஆனால் வனாந்தரத்தில் அவர்களின் பயணத்தின் முடிவில், அவர்கள் மிகப் பெரிய சோதனையை எதிர்கொண்டபோது, கர்த்தர் அவனை எடுத்துக்கொண்டார். இஸ்ரவேலுக்கு அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களை நினைவில் வைத்து யோசுவா என்ற ஒரு புதிய தலைவனை கர்த்தர் எழும்பப்பண்ணினார்.

- “புத்திமானாய் நடந்துகொள்ள” என்ன செய்யவேண்டுமென கர்த்தர் யோசுவாவுக்குக் கூறினார்? (யோசுவா 1:8 பார்க்கவும்). அவனது அழைப்பில் முன்னேறிச் செல்ல வேதங்களைப் படிப்பது யோசுவாவுக்கு முக்கியமானதென ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்? ஒழுங்காய் வேதங்களை வாசிப்பது எவ்வாறு உங்களுக்கு உதவியிருக்கிறது?
- தனது வாழ்க்கையின் முடிவில் என்ன முக்கியமான ஆலோசனையை யோசுவா கொடுத்தான்? (யோசுவா 24:14–15 பார்க்கவும்). கர்த்தரை சேவிப்பதற்கு *இன்று* தீர்மானிப்பது ஏன் முக்கியமானது? அவரை சேவிக்க நாம் தீர்மானித்திருக்கிறோமென நாம் எவ்வாறு காட்டமுடியும்?

கூடுதலான படிப்பு: யோசுவா 7; 14

## *நியாயாதிபதிகளின் ஆளுகை* 19
*நியாயாதிபதிகள் 2; 4; 6–7; 13–16*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. நியாயாதிபதிகள் 2:6–23. இஸ்ரவேல் மக்களின் வளர்ந்துவந்த தலைமுறை பொய்யான தேவர்களை வணங்கி கர்த்தரை கைவிட்டார்கள்.

ஆ. நியாயாதிபதிகள் 4:1–16. கானானின் இராஜாவான யெபீனிடமிருந்து இஸ்ரவேலை விடுவிக்க பாராக்குக்கு கட்டளையிடப்பட்டது (4:1–7). அவனோடு தெபொராள் வருவதாயிருந்தால் அவன் போவதற்கு ஒப்புக்கொண்டான் (4:8–9). கானானியர்களிடமிருந்து தெபொராளும் பாராக்கும் இஸ்ரவேலர்களை விடுவித்தார்கள் (4:10–16).

இ. நியாயாதிபதிகள் 6–7. மீதியானியரிடமிருந்து இஸ்ரவேலை விடுவிக்க கிதியோனுக்கு கட்டளையிடப்பட்டது (6:1–24). அவனும் 10 பிறமனிதர்களும் பாகாலின் பலிபீடத்தை அழித்தார்கள் (6:25–35). இரண்டு அடையாளங்களை அவனுக்குக் கொடுத்து கிதியோனுக்கு உதவியை கர்த்தர் உறுதிபடுத்தினார் (6:36–40). கிதியோனும் பிற 300 மனிதர்களும் இஸ்ரவேலை விடுவித்தார்கள் (7:1–25).

ஈ. நியாயாதிபதிகள் *13–16.* நசரேயனாக அவனை வளர்த்துவர சிம்சோனின் பெற்றோர் ஒரு தூதனால் அறிவுறுத்தப்பட்டார்கள் *(13:1–25)*. மகத்தான பெலத்தின் சாதனைகளை சிம்சோன் நடப்பிக்கிறான், ஆனால் நசரேயனின் அநேக பொருத்தனைகளை மீறுகிறான் *(14–15)*. தெலீலாளின் சதியில் சிம்சோன் வீழ்ந்து, அவனது மயிர்கள் வெட்டப்பட்டு அவன் பலவீனமானவனாகிறான், பெலிஸ்தியர்களால் சிறைபிடிக்கப்படுகிறான், அவர்களின் ஆலயத்தை விழப்பண்ணும்போது மரிக்கிறான் *(16:1–31)*.

யோசுவா மரித்தபின், இஸ்ரவேலின் ஆட்சியாளர்களாகவும் இராணுவத் தலைவர்களாகவும் நியாயாதிபதிகள் ஆட்சி செய்தனர். மதமாறுபாட்டின், சிறையிருப்பின், மனந்திரும்புதலின் மற்றும் அநேக தடவைகள் விடுதலையின் வட்டத்திற்குள் இஸ்ரவேலர் சென்றதில், அவர்களின் ஆளுகையின் அநேகம் பரிதாபமாயிருந்தன. இந்த வரலாற்றின் பரிதாபமான பகுதிகளை சமப்படுத்த, தங்களின் மக்களை விடுவிப்பதற்கு உதவியதில் விசுவாசத்தையும் துணிவையையும் காட்டி உண்மையாயிருந்த தெபொராள் மற்றும் கிதியோன் போன்றோரின் நேர்மையான நியாயாதிபதிகள் கதைகளிருக்கின்றன.

- ஒரு உண்மையான நண்பராயிருப்பதைப்பற்றி தெபொராளிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? கடினமான சவால்களை அல்லது கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய நீங்கள் எதிர்கொள்ளும்போது உங்கள் நண்பர்கள் எவ்வாறு உதவினார்கள்? மற்றவர்களுக்கு நீங்கள் எவ்வாறு சிறந்த நண்பர்களாயிருக்க முடியும்?
- ஒரு நசரேயனாகவும் இஸ்ரவேல் வீட்டாரின் ஒரு அங்கத்தினராகவும் கர்த்தருடன் சிம்சோன் உடன்படிக்கைகளைச் செய்தான். கர்த்தருடன் நாம் என்ன உடன்படிக்கைகளைச் செய்கிறோம்? எவ்வாறு இந்த உடன்படிக்கைகள் உங்களை பெலப்படுத்தியது?
- அவனது உடன்படிக்கையிலிருந்து சிம்சோனின் மீறுதலால் வந்த விளைவுகள் எவை? (நியாயாதிபதிகள் *16:17–21* பார்க்கவும்). நமது உடன்படிக்கைகளை நாம் மீறும்போது விளைவுகள் என்னவாயிருக்கிறது?

---

## *“நீ குணசாலி என்பதை . . . என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்”* 20

*ரூத்; 1 சாமுவேல் 1*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. ரூத் *1–2.* தனது கணவன் மரித்தபின், தனது மாமி நவோமியுடன் பெத்லேகமிற்கு ரூத் போகிறாள். பெத்லகேமில், அவளை அன்புடன் நடத்திய போவாசின் வயல்களில் ரூத் வேலை செய்கிறாள்.

ஆ. ரூத் *3–4.* போவாசின் காலடியில் ரூத் படுக்கிறாள், அவளைத் திருமணம் செய்துகொள்வதாக அவன் வாக்களிக்கிறான். அவர்கள் திருமணம் செய்துகொண்டு ஒரு பிள்ளையைப் பெறுகிறார்கள்.

இ. *1* சாமுவேல் *1; 2:1–2, 20–21.* ஒரு மகனால் அன்னாள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவள் பொருத்தனை செய்தபடி கர்த்தருக்கு அவனை ஒப்புக்கொடுக்கிறாள். பின்னர் அநேக பிள்ளைகளால் அவள் ஆசீர்வதிக்கப்படுகிறாள்.

- நவோமியுடன் பெத்லகேமிற்குப் போனதில் ரூத் எதை இழந்தாள்? நவோமியுடன் போனதில் என்ன பலனை ரூத் பெற்றாள்? (இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்; ரூத் *1:16* பார்க்கவும்). சுவிசேஷத்திற்காக செய்த தியாகங்களைப்பற்றி ரூத்திடமிருந்து எதை நாம் கற்றுக்கொள்கிறோம்?

- கர்த்தரின் ஊழியத்திற்காக சாமுவேலைக் கொடுத்ததைப்பற்றி அன்னாள் உணர்ந்ததைப்பற்றி நீங்கள் எவ்வாறு நினைக்கிறீர்கள்? அவருக்குக் கொடுக்க கர்த்தர் நம்மிடம் எதை கேட்கிறார்? அவருக்கு கொடுப்பதைப்பற்றி நமது எண்ணம் என்னவாயிருக்கவேண்டும்?
- என்ன நற்குணங்களுக்கு ரூத், நவோமி மற்றும் அன்னாள் எடுத்துக்காட்டுகளாயிருந்தனர்?

---

## *அவரைக் கனம்பண்ணுகிறவர்களை தேவன் கனம்பண்ணுவார்* 21

***1 சாமுவேல் 2–3; 8***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. 1 சாமுவேல் 2:12–17, 22–25. ஏலியின் குமாரரர்கள் அக்கிரமங்களைச் செய்து தங்கள் தகப்பனால் ஆலோசனை கொடுக்கப்பட்டார்கள்.

ஆ. 1 சாமுவேல் 2:27–36; 3:12–14. அவனது குடும்பத்தின் துன்மார்க்கத்திற்கான விளைவுகளைப்பற்றி ஒரு தேவ மனுஷன் ஏலியை எச்சரித்தான்.

இ. 1 சாமுவேல் 3. கர்த்தர் சாமுவேலை அழைக்கிறார், சாமுவேல் மறுஉத்தரமளிக்கிறான்.

ஈ. 1 சாமுவேல் 8. அவர்கள் “மற்ற எல்லா தேசங்களையும் போலிருக்க” இஸ்ரவேலர்களுக்கு ஒரு இராஜா வேண்டுமென கேட்டார்கள். அத்தகைய முடிவின் அபாயங்களைப்பற்றி சாமுவேல் எச்சரிக்கிறான்.

- அவர்கள் யாரை மதிக்கத் தேர்ந்தெடுத்தார்களென்பதைப்பற்றி ஏலியின் குமாரர்களின் செயல்கள் என்ன தெரிவிக்கின்றன? (1 சாமுவேல் 2:12–17, 22–25). நமது வாழ்வில் எந்த பகுதிகளில், கர்த்தரைவிட நம்மை நாம் சிலசமயங்களில் மதித்து சந்தோஷப்படுத்துகிறோம்?
- தேவனைவிட அதிகமாக தனது குமாரர்களுக்கு ஏலி மதிப்பளித்தானென சொல்லி மனிதன் ஒருவன் வந்து ஏலியை கண்டித்தான் (1 சாமுவேல் 2:27–29 பார்க்கவும்). எந்த வழியில் தேவனைவிட தனது குமாரர்களுக்கு ஏலி அதிக மதிப்புக் கொடுத்தான்? தேவனைவிட மற்ற மக்களுக்கு சிலசமயங்களில் நாம் எவ்வாறு மதிப்பு கொடுக்கிறோம்?
- சாமுவேல் கர்த்தரை எவ்வாறு மதித்தான்? அவனை எவ்வாறு கர்த்தர் மதித்தார்? (1 சாமுவேல் 3:19 பார்க்கவும்; 1 சாமுவேல் 2:30ஐயும் பார்க்கவும்). நாம் அவரை மதித்தால் கர்த்தர் நம்மை மதிப்பார் என்பதைப்பற்றி நீங்கள் எவ்வாறு நினைக்கிறீர்கள்?

---

## *கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்”* 22

***1 சாமுவேல் 9–11; 13; 15–17***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. 1 சாமுவேல் 9–11. சாமுவேலிடமிருந்து வழிகாட்டுதலை சவுல் நாடுகிறான் (9:1–14, 18–24). சவுல் இராஜாவாயிருப்பான் என சாமுவேலுக்கு கர்த்தர் வெளிப்படுத்துகிறார் (9:15–17). சவுலுக்கு சாமுவேல் ஆலோசனைகூறி இஸ்ரவேலின் முதல் இராஜாவாக அவனை அபிஷேகம் செய்கிறான் (9:25–27; 10:1–8). சவுல் ஆவியில் மறுபடி பிறந்து அவன் தீர்க்கதரிசனமுரைக்கிறான் (10:9–13). சவுலை, மக்களுக்கு சாமுவேல் அறிமுகம் செய்கிறான் (10:17–27).

ஒரு யுத்தத்தில் வெற்றிக்கு இஸ்ரவேலை சவுல் நடத்துகிறான் (11:1–11). மக்களை நடத்துவதைப்பற்றிய அவனது திறமையை சந்தேகித்த மனிதர்களை தண்டிக்க அவன் மறுக்கிறான் (11:12–15).

ஆ. 1 சாமுவேல் 13:1–14. சரியான அதிகாரமில்லாமல் ஒரு தகனபலியை சவுல் கொடுக்கிறான்.

இ. 1 சாமுவேல் 15. அமலேக்கியர்களையும் அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் அழிக்க சவுல் கட்டளையிடப்பட்டான், ஆனால் ஒரு பலிக்காக அவர்களின் சில விலங்குகளை அவன் எடுத்துக்கொண்டான் (15:1–9). இராஜாவாக சவுலை கர்த்தர் ஒப்புக்கொள்ளவில்லை, மேலும் பலியைவிட கீழ்ப்படிதல் சிறந்ததென சவுலுக்கு சாமுவேல் கூறுகிறான் (15:10–35).

ஈ. 1 சாமுவேல் 16. சவுலுக்குப் பின் இராஜாவாக தாவீதை கர்த்தர் தேர்ந்தெடுக்கிறார் (16:1–13). சவுலிடமிருந்து பரிசுத்த ஆவி புறப்பட்டுப்போயிற்று, அவனை ஒரு பொல்லாத ஆவி பிடித்துக்கொண்டது (16:14–16; பொல்லாத ஆவி தேவனிடமிருந்து வந்ததல்லவென ஜோசப் ஸ்மித் மொழிபெயர்ப்பில் இந்த வசனங்கள் காட்டுகிறது). அவனுக்கு சுரமண்டலம் வாசிக்கவும் தனது ஆயுததாரியாகவும் தாவீதை சவுல் தேர்ந்தெடுக்கிறான் (16:17–23).

உ. 1 சாமுவேல் 17. கர்த்தரின் பெலத்தால் கோலியாத்தை தாவீது கொன்றுபோட்டான்.

- அமலேக்கியரின் விலங்குகளை வைத்துக்கொண்டதற்கான சவுலின் விளக்கத்திற்கு சாமுவேல் எவ்வாறு பதிலளித்தான்? (1 சாமுவேல் 15:22 பார்க்கவும்). சாமுவேலின் வார்த்தைகள் நமக்கு எவ்வாறு பொருந்தும்?
- ஈசாயின் குமாரர்களில் யார் சவுலுக்குப் பின் இராஜாவாக இருப்பதென்பதை தீர்மானிக்க அவன் முயற்சித்துக்கொண்டிருந்தபோது சாமுவேல் எதைக் கற்றுக்கொண்டான்? (1 சாமுவேல் 16:6–7 பார்க்கவும்). கர்த்தர் நம்மை எவ்வாறு மதிப்பிடுகிறார் என்பதைப்பற்றி 1 சாமுவேல் 16:7 என்ன போதிக்கிறது? நமது இருதயங்களில் கர்த்தர் எதைத் தேடுகிறார்? மற்றவர்களின் வெளியரங்கமான தோற்றத்திற்கும் அப்பால் பார்க்கவும் இருதயத்தைப் பார்க்கவும் நமது ஆற்றலையும் ஒப்புக்கொடுத்தலையும் நாம் எவ்வாறு விருத்திசெய்ய முடியும்?
- கோலியாத்துடன் சண்டையிட தாவீதுக்கு எவ்வாறு தைரியம் வந்தது? (1 சாமுவேல் 17:32–37, 45–47). நீங்கள் எதிர்கொள்கிற “கோலியாத்துக்களை” மேற்கொள்ள கர்த்தர் எவ்வாறு உங்களுக்குதவினார்?

கூடுதல் படிப்பு: 1 சாமுவேல் 12; 14.

---

## “கர்த்தர் எனக்கும் உனக்கும் என்றைக்கும் நடுநிற்கும் சாட்சி” 23

### *1 சாமுவேல் 18–20; 23–24*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. 1 சாமுவேல் 18:1–16. யோனத்தானும் தாவீதும் நட்பின் ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார்கள் (18:1–4). யுத்தத்தில் தனது வெற்றிக்காக இஸ்ரவேலர்களால் தாவீது கௌரவிக்கப்பட்டான் (18:5–7). தாவீதின் மேல் சவுல் பொறாமை கொண்டு அவனைக் கொல்ல முயற்சிக்கிறான் (18:8–16; சவுலின்மேல் வந்த பொல்லாத ஆவி தேவனால் அனுப்பப்பட்டதல்ல என்பதை குறிக்கிற ஜோசப் ஸ்மித் மொழிபெயர்ப்பின் 10வது வசனத்தைக் கவனிக்கவும்)

*ஆ.1 சாமுவேல் 18:17–30; 19:1–18. யுத்தத்தில் தாவீது செத்துப்போவான் என சவுல் நம்பியிருக்கிறதை அறியாத வண்ணம், சவுலின் மகளைத் திருமணம் செய்துகொள்ளும் உரிமைக்காக பெலிஸ்தியர்களுடன் தாவீது சண்டை போடுகிறான் (18:17–25). பெலிஸ்தியர்கள்மேல் தாவீது வெற்றிகொண்டு, சவுலின் மகளான மீகாளைத் திருமணம் செய்கிறான் (18:26–28). ஒளிந்துகொள்ளும்படி தாவீதுக்கு யோனத்தான் கூறி, அவனைக் கொல்லாதிருக்குமாறு சவுலை ஒப்புக்கொள்ள வைக்க முயற்சிக்கிறான் (19:1–7). தாவீதைக் கொல்ல முயன்ற மற்றொரு முயற்சியில் சவுல் தோற்கிறான் (19:9–10). அவனது உயிரை எடுக்க சவுலின் மற்றொரு முயற்சியில், மீகாள் தாவீதைக் காப்பாற்றுகிறாள் (19:11–18).*

*இ. 1 சாமுவேல் 20. தங்கள் நட்பு மற்றும் சமாதானத்தின் உடன்படிக்கையை யோனத்தானும் தாவீதும் புதுப்பித்தார்கள். தாவீதைக் கொல்ல சவுல் மீண்டும் முயற்சித்தபோது, தாவீதை யோனத்தான் எச்சரிக்கிறான்.*

*ஈ. 1 சாமுவேல் 23–24. தாவீது தொடர்ந்து பெலிஸ்தியர்களுடன் சண்டைபோட்டு சவுல் ஓடுகிறான். தாவீது சவுலைக் கண்டுபிடித்து அவனது உயிரைத் தப்பவிடுகிறான்.*

- *தாவீதின் மேல் யோனத்தானுக்கு பொறாமை ஏற்படவில்லை அல்லது அவனால் பயமுறுத்தப்படவில்லை என ஏன் நினைக்கிறீர்கள்? (1 சாமுவேல் 18:1, 3).*
- *தாவீதுக்கு எதிராகுவதற்கு எது சவுலை உடனடியாக செயல்பட வைத்தது? (1 சாமுவேல் 18:6–9 பார்க்கவும்). மற்றவர்களின் வெற்றியைப்பற்றி சந்தோஷப்பட சிலசமயங்களில் ஏன் கடினமாயிருக்கிறது? நமது ஆவிக்குரிய வளமையை பொறாமையும் பெருமையும் எவ்வாறு பாதிக்கிறது?*
- *யோனத்தான் மற்றும் தாவீதின் நட்பை தேவனில் விசுவாசம் எவ்வாறு ஊக்குவிக்கிறது? (1 சாமுவேல் 20:23 பார்க்கவும்). கர்த்தர்மீதுள்ள நமது அன்பு மற்றவர்கள்மீது நமக்குள்ள அன்பை எவ்வாறு பாதிக்கிறது?*
- *பழிவாங்குதலைப்பற்றி தாவீதின் எடுத்துக்காட்டு நமக்கு என்ன போதிக்கிறது? (1 சாமுவேல் 24:6–15 பார்க்கவும்).*

*கூடுதல் படிப்பு: 1 சாமுவேல் 14:1–16; 2 சாமுவேல் 1*

## “சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்” 24

***2 சாமுவேல் 11–12; சங்கீதம் 51***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. 2 சாமுவேல் 11. உரியாவின் மனைவி பத்சேபாளுடன் தாவீது விபச்சாரம் செய்தான் (11:1–5). தனது பாவத்தை மறைக்க முயற்சிப்பதில் தாவீது தவறுகிறான் (11:6–13). உரியாவின் மரணத்திற்கு அவன் ஏற்பாடு செய்கிறான் (11:14–17). பத்சேபாளை தாவீது திருமணம் செய்கிறான், அவர்களுக்கு ஒரு மகன் பிறக்கிறான் (11:26–27).*

*ஆ.2 சாமுவேல் 12:1–23. தாவீதிற்கு ஒரு உவமையைக் கூறி தாவீதின் பாவங்களின் கடுமையான விளைவுகளைப்பற்றி நாத்தான் தீர்க்கதரிசி போதிக்கிறான் (12:1–6). அவனது பாவங்களுக்காக அவன் தண்டிக்கப்படுவான் என தாவீதுக்கு கூறப்பட்டது (12:7–14; ஜோசப் ஸ்மித் மொழிபெயர்ப்பின் 13வது வசனத்தில் “நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவத்தை நீங்கச் செய்ய மாட்டார்” என நாத்தான் கூறியதைக் கவனிக்கவும்). தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த முதல் மகன் சிறுவயதிலேயே மரிக்கிறான் (12:15–23).*

*இ. சங்கீதம் 51. மன்னிப்பை நாடுகிற தாவீதின் மனந்திரும்புதல்.*

*சவுலைத் தொடர்ந்து இஸ்ரவேலின் வரலாற்றின் மகத்தான இராஜாக்களின் ஒருவனாக தாவீது இராஜாவாகிறான். கோத்திரங்களை ஒரு தேசமாக அவன் ஒன்றுசேர்த்து, அவனது மக்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த ஆஸ்திகளை சேர்த்து, தேவனின் பிரமாணத்தின் அடிப்படையிலான ஒரு ஆட்சியை அமைக்கிறான். ஆயினும் அவனது பாவங்களின் விளைவால் அவனது கடைசி தனிப்பட்ட 20 ஆண்டுகள் வாழ்க்கை மோசமாயிருந்தது.*

- *விபச்சாரத்தில் ஈடுபட அவனை நடத்துவதற்கு தாவீது என்ன செய்தான்? (2 சாமுவேல் 11:2–4 பார்க்கவும்). பாலியல் பாவங்களைச் செய்யும்படி மக்களை சோதிக்க எது மக்களை நடத்தலாம்?*
- *அவனது ஒழுக்கக்கேட்டை மறைக்க ஒரு முயற்சியில் இன்னும் மிகமோசமான என்ன பாவத்தை தாவீது செய்தான்? (2 சாமுவேல் 11:14–17 பார்க்கவும்). யாரிடமிருந்து தனது பாவங்களை மறைக்கமுடியுமென தாவீது நினைத்தான் என நீங்கள் நினைக்கிறீர்கள்? இன்று மக்கள் எவ்வாறு பாவங்களை மறைக்க முயற்சிக்கிறார்கள்? நமது பாவங்களை மறைக்க நாம் முயலும்போது என்ன நடக்கிறது?*

*அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்" (சங்கீதம் 51:13) என மற்றவர்கள் மனந்திரும்ப உதவ ஒரு விருப்பத்தை கர்த்தருக்கான ஒரு சங்கீதத்தில் தாவீது தெரிவிக்கிறான். உரியாவின் மரணத்தை அவன் ஏற்பாடு செய்ததால், தான் மேன்மையடைவதை தாவீது கைவிட்டுவிட்டாலும்கூட, விபச்சாரத்தின் பாவத்திற்காக அவன் மனந்திரும்புதலை நாடியதில் அவனது மனந்திரும்பும் எண்ணத்தை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. உண்மையான மனந்திரும்புதலின் அநேக தன்மைகளை சங்கீதம் 51வது அதிகாரத்திலுள்ள அவனது வார்த்தைகள் போதிக்கிறது. சங்கீதத்தை நீங்கள் படிக்கும்போது, உங்கள் வாழ்வில் தாவீதின் மனந்திரும்புதலின் எடுத்துக்காட்டை நீங்கள் பயன்படுத்த வழிகளை தேடுங்கள்.*

*கூடுதல் படிப்பு: 2 சாமுவேல் 2–10*

---

## *"சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக"* 25

***சங்கீதம்***

*இங்கே விவரிக்கப்பட்டுள்ள வேதங்களைப் படித்து, உங்களால் முடிந்தமட்டும் சங்கீதம் புத்தகத்தை அதிகமாகப் படிக்கவும்.*

*தேவனுக்கு துதிகள் அல்லது வேண்டுதல்களாக முதலில் பாடப்பட்ட கவிதைகளின் ஒரு திரட்டே சங்கீதப் புத்தகங்கள். இவைகளில் அநேகம் தாவீதால் எழுதப்பட்டவை. பழங்கால இஸ்ரவேலிலிருந்து இந்த புத்தகம் ஒரு துதிப்பாடலாக இருக்கிறது.*

*மேசியாவாக கிறிஸ்துவின் ஊழியத்தை அநேக சங்கீதங்கள் தீர்க்கதரிசனமுரைக்கிறது. சங்கீதப் புத்தகத்தில் எழுதப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிய பின்வரும் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலைக் கவனிக்கவும்:*

| *தீர்க்கதரிசனம்* | *நிறைவேறுதல்* |
|---|---|
| *சங்கீதம் 69:20* | *மாற்கு 14:32–41* |
| *சங்கீதம் 22:7–8* | *மத்தேயு 27:39–43* |
| *சங்கீதம் 22:16* | *மாற்கு 15:25* |
| *சங்கீதம் 22:18* | *மத்தேயு 27:35* |
| *சங்கீதம் 22:1* | *மத்தேயு 27:46* |
| *சங்கீதம் 16:10* | *அப்போஸ்தலர் 2:31–32; 13:34–35* |

இரட்சகரின் இரக்கத்திற்காக, மன்னிப்பிற்காக, அன்பிற்காக நன்றியுணர்வை தெரிவிக்கிற பின்வரும் சங்கீதங்களைப் படிக்கவும்: சங்கீதம் 23; 51; 59:16; 78:38; 86:5, 13; 100:4–5; 103:2–4, 8–11, 17–18.

கர்த்தரில் நம்பிக்கை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தைப் போதிக்கிற பின்வரும் சங்கீதங்களைப் படிக்கவும்: சங்கீதம் 4:5; 5:11; 9:10; 18:2; 56:11; 62:8; 118:8–9.

ஆலயத்தைப்பற்றிய பின்வரும் சங்கீதங்களைப் படிக்கவும்: சங்கீதம் 5:7; 15:1–3; 24; 27:4; 65:4; 84:1–2, 4, 10–12; 122; 134.

---

## சாலொமோன் இராஜா: ஞானத்தின் மனிதன், முட்டாள்தனத்தின் மனிதன் 26

***1 இராஜாக்கள் 3; 5–11***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. 1 இராஜாக்கள் 3:5–28. தனது தகப்பன் தாவீதைத் தொடர்ந்து சாலொமோன் இராஜாவாகி கர்த்தரைப் பின்பற்றினான். சாலொமோனுக்குக் கர்த்தர் தோன்றி ஞானத்தால், செல்வச்செழிப்பால், கௌரவத்தால் அவனை ஆசீர்வதித்தார் (3:5–15). குழந்தையின் தாய் யார் என ஞானமாகத் தீர்மானிக்கிற, சாலொமோனிடத்தில் இரண்டு பெண்கள் ஒரு குழந்தையைக் கொண்டுவந்தார்கள் (3:16–28).

ஆ. 1 இராஜாக்கள் 5–6; 7:1–12. ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டுவதற்கு சாலொமோன் இராஜா கட்டளையிடுகிறான் (5–6). அவனுக்கென்று ஒரு அரண்மனையையும் அவன் கட்டினான் (7:1–12).

இ. 1 இராஜாக்கள் 8:22–66; 9:1–9. ஆலயத்தை சாலொமோன் பிரதிஷ்டை செய்து ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகாரமான செழிப்புடன் இஸ்ரவேலர்களை ஆசீர்வதிக்கும்படி கர்த்தரைக் கேட்கிறான் (8:22–66). சாலொமோனுக்கு கர்த்தர் மீண்டும் தோன்றி, அவருக்கு அவர்கள் பணிவிடை செய்தால் இஸ்ரவேலரை ஆசீர்வதிப்பதாகவும், ஆனால் அவர்கள் பிறதேவர்களிடம் திரும்பினால் அவர்களை அவர் சபிப்பதாகவும் வாக்களித்தார் (9:1–9).

ஈ. 1 இராஜாக்கள் 10–11. சாலொமோனின் செல்வத்தாலும் அவனது ஞானத்தாலும் அவனது புகழ் பரவுகிறது (10:1–13, 24–25). அவன் மிகுந்த செல்வந்தனாகிறான் (10:14–23, 26). பொய்யான தேவர்களை வணங்க அவனை இணங்கச் செய்த இஸ்ரவேலல்லாத அநேக பெண்களை அவன் திருமணம் செய்கிறான் (11:1–10). சாலொமோனுக்கு எதிராக கர்த்தர் எதிர்ப்புகள் எழச்செய்தார் (11:11–25). சாலொமோனின் துன்மார்க்கத்தால் இஸ்ரவேலின் இராஜ்யம் சிதறடிக்கப்படுமென ஒரு தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறான் (11:26–40).

- ஒரு "ஞானமுள்ள இருதயமிருப்பது" என்றால் என்ன அர்த்தம்? (1 இராஜாக்கள் 3:28; 4:29 பார்க்கவும்). அந்த ஆசீர்வாதத்திற்கான ஒரு விசேஷித்த தேவையை சாலொமோன் ஏன் உணர்ந்தான்? (1 இராஜாக்கள் 3:7–8 பார்க்கவும்). வீட்டில், வேலையில், பள்ளிக்கூடத்தில், மற்றும் சபையில் நமது பொறுப்புகளுக்கு "தேவனின் ஞானமிருப்பது" எவ்வாறு நமக்கு உதவும்? அந்த ஞானத்தை நாம் எவ்வாறு பெறலாம்?

- ஆலயத்தைப்பற்றி சாலொமோனுக்கு கர்த்தர் என்ன வாக்குத்தத்தம் கொடுத்தார்? (1 இராஜாக்கள் 6:11–13 பார்க்கவும்). இன்று அதைப்போன்ற என்ன வாக்குத்தத்தத்தை கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார்? (கோ.உ 97:15–17 பார்க்கவும்). ஆலயத்தின் செல்வாக்கை நமது வாழ்வில் பெலமாகக் காத்துக்கொள்வதற்கு நாம் என்ன செய்யமுடியும்?

- ஆலயம் கட்டப்பட்டதற்குப்பின் சாலொமோனின் செல்வமும் கௌரவமும் எவ்வாறு அதிகரித்தது? (1 இராஜாக்கள் 10:1–15, 24–25 பார்க்கவும்). இந்த ஆசீர்வாதங்களை எவ்வாறு சாலொமோன் தவறாகப் பயன்படுத்தினான்? (1 இராஜாக்கள் 10:16–23, 26–29 பார்க்கவும்). ஞானமும், செல்வமும், கௌரவமும் எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும்? (யாக்கோபு 2:18–19 பார்க்கவும்).

கூடுதல் படிப்பு: 1 இராஜாக்கள் 2:1–12; 4:29–34; 7:13–51; 1 நாளாகமம் 29; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 46.

---

## துன்மார்க்க மற்றும் நீதியான தலைவர்களின் செல்வாக்கு

**27**

*1 இராஜாக்கள் 12–14; 2 நாளாகமம் 17; 20*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. 1 இராஜாக்கள் 12:1–20. தனது தகப்பனான சாலொமோனைத் தொடர்ந்து இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் ரெகொபெயாம் இராஜாவானான். அவனது மக்களுக்கு சேவை செய்ய முதியோரின் ஆலோசனையை அவன் ஒதுக்கிவிட்டு அதற்குப் பதிலாக அவர்கள்மேல் அதிக சுமையை வைக்க வகைதேடினான் (12:1–15). பத்து கோத்திரங்கள் கலகம் செய்து இராஜ்யம் பிரிக்கப்பட்டது (12:16–19; இஸ்ரவேல் இராஜ்யம் என்ற பட்டத்தை பத்து கோத்திரங்களும் வைத்திருந்து, யூதா மற்றும் பென்யமீன் கோத்திரத்தார் ரெகொபெயாமின் ஆளுகையின் கீழ்வந்து அவர்கள் யூதாவின் இராஜ்யம் என்றழைக்கப்பட்டார்கள்). இஸ்ரவேலின் இராஜ்யம் ரெகொபெயாமை இராஜாவாக தேர்ந்தெடுத்தார்கள் (12:20).

ஆ. 1 இராஜாக்கள் 12:25–33; 13:33–34; 14:14–16, 21–24. (12:25–33; 13:33–34). விக்கிரகாரதனைக்கு தனது மக்களை ரெகொபெயாம் நடத்துகிறான் (12:25–33; 13:33–34). ரெகொபெயாமின் குடும்பத்தின் அழிவைப்பற்றியும் இஸ்ரவேலின் சிதறடிப்பைப்பற்றியும் ஒரு தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறான் (14:14–16). யூதாவின் இராஜ்யத்தை ரெகொபெயாம் விக்கிரகாரதனைக்கு நடத்துகிறான் (14:21–24).

இ. 2 நாளாகமம் 17:1–10; 20:1–30. ரெகொபெயாமின் கொள்ளுப்பேரனான யோசபாத், யூதாவின் இராஜ்யத்தில் நீதியாக ஆளுகை செய்தான் (17:1–10). யூதாவின் எதிரிகள் அவர்களுக்கு எதிராக வந்தபோது, யோசபாத்தும் அவனது மக்களும் உபவாசித்து ஜெபித்தார்கள். யுத்தம் அவர்களுடையதல்ல, அவருடையதென கர்த்தர் அவர்களுக்குக் கூறுகிறார். அவர்களை தாக்குகிறவர்கள் அவர்களுக்குள் யுத்தம் செய்து அவர்களே ஒருவருக்கொருவரை அழித்தார்கள் (20:1–30).

- வெற்றிகரமாக ஆளுகை செய்வதைப் பற்றி ரெகொபெயாமிற்கு முதியோர் என்ன ஆலோசனை கொடுத்தார்கள்? (1 இராஜாக்கள் 12:6–7; 2 நாளாகமம் 10:7 பார்க்கவும்). வீட்டில், வேலையில், பள்ளிக்கூடத்தில் மற்றும் சபையில் இந்த ஆலோசனையை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம்?
- கர்த்தருக்கு முன் தங்களைத் தாழ்த்த யூதாவின் மக்களை யோசபாத் ஊக்குவித்தான் (2 நாளாகமம் 20:3–4). நீதியான தலைமையில் என்ன எடுத்துக்காட்டுகளை நீங்கள் பார்க்கிறீர்கள்? நாம் சேவிக்கிறவர்கள் நீதியாக வாழ அவர்களை ஊக்குவிக்க நாம் என்ன செய்யலாம்?

கூடுதல் படிப்பு: 1 இராஜாக்கள் 11:26–40; 2 இராஜாக்கள் 17:20–23

# “அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று” 28

## *1 இராஜாக்கள் 17–19*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. *1 இராஜாக்கள் 17.* மழைக்கு எதிராக எலியா வானத்தை அடைக்கிறான், ஆகாபிடமிருந்தும் யேசபேல்லிடமிருந்தும் ஓடி, அற்புதமாக வனாந்தரத்திலே வாழ்ந்துவந்தான் (17:1–6). உணவையும் தண்ணீரையும் அவனுக்குக் கொடுக்கிற ஒரு விதவையிடம் எலியாவை கர்த்தர் அனுப்புகிறார் (17:7–16). மரணத்திலிருந்து விதவையின் மகனை எலியா உயிர்த்தெழுப்புகிறான் (17:17–24).

ஆ. *1 இராஜாக்கள் 18.* இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஏற்பட்ட பஞ்சத்திற்குப்பின் ஆகாபை எலியா சந்திக்கிறான், தங்கள் பலியை ஏற்றுக்கொள்ள வானத்திலிருந்து நெருப்பை அனுப்ப பாகால் தீர்க்கதரிசிகளை சவால் விட்டான் (18:1–2, 17–24). பாகாலின் தீர்க்கதரிசிகள் தோற்றுப்போனார்கள், ஆனால் எலியா ஜெபிக்கிறான், அவன் ஆயத்தம்செய்திருந்த பலியை ஏற்றுக்கொள்ள கர்த்தர் நெருப்பை அனுப்புகிறார் (18:25–40). பஞ்சத்தை முடித்துகொள்ள எலியா ஜெபிக்கிறான், கர்த்தர் மழையை அனுப்புகிறார் (18:41–46).

இ. *1 இராஜாக்கள் 19.* எலியாவைக் கொல்ல யேசபேல் முயற்சிக்கிறான் (19:1–2). எலியா வனாந்தரத்திற்குள் ஓடுகிறான், ஒரு தூதனால் அவன் போஷிக்கப்படுகிறான் (19:3–8). ஓரேப்புக்கு எலியா போகிறான், அங்கே பரிசுத்த ஆவியால் அவன் தேற்றப்பட்டு, தேவனின் பணியைத் தொடர்ந்து செய்ய அறிவுறுத்தப்பட்டான் (19:9–19).

விக்கிரகராதனைக்கு இஸ்ரவேலை ரெகொபெயாம் நடத்தியபின், அவனும் அவனது சந்ததியரும் அழிக்கப்பட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து மற்றொரு விக்கிரகராதனையின் இராஜாக்கள் வந்தார்கள். அந்த ஆட்சியாளர்களில் “அவனுக்கு முன்பு வந்த அனைத்து இராஜாக்களையும்விட ஆகாப் இராஜாவே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் கோபத்தை அதிகமாய்க் கிளறவைத்தான்” (1 இராஜாக்கள் 16:33). அவன் யேசபேல்லை திருமணம் செய்து, அவளது பழக்கமான பாகாலை வணங்குதலைப் பின்பற்றி இந்த பொய்யான கடவுளை வணங்குவதில் தன்னோடு மக்களும் சேர்ந்துகொள்ள ஊக்குவித்தான். ஆகாபுக்கும் அவனது இராஜ்யத்திற்கும் எச்சரிக்கையின் வார்த்தைகளை எலியா கொடுத்தான்.

- அவளும் அவளது மகனும் உணவருந்துவதற்கு முன் எலியாவுக்கு உணவு கொடுக்க ஏழை விதவைக்கு கர்த்தர் கட்டளையிட்டது ஏன் என நீங்கள் நினைக்கிறீர்கள்? (1 இராஜாக்கள் 17:14–16 பார்க்கவும்). நமது வாழ்க்கையில் எந்த வழிகளில் தேவனுடைய காரியங்களுக்கு முதலிடம் கொடுக்க நாம் கேட்கப்படுகிறோம்?
- கார்மல் மலையில் எலியா கூறுவதைக் கேட்க மக்கள் கூடிவந்தபோது, “நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்?” (1 இராஜாக்கள் 18:21). சிலசமயங்களில் நாம் எவ்வாறு இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடக்கிறோம்?
- ஓரேப் மலையில் எலியாவை எவ்வாறு தேவன் தேற்றினார்? (1 இராஜாக்கள் 19:9–13 பார்க்கவும்). தேவன் நம்மோடு எவ்வாறு தொடர்புகொள்கிறார் என்பதைப்பற்றி இதிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்கிறோம்? மிகுந்த சத்தம் மற்றும் வியக்கத்தக்க வல்லமையைக் காட்டுகிறதன் மூலமாக தேவன் தொடர்புகொள்கிறதைவிட மிகவழக்கமாக, பரிசுத்த ஆவியின் “அமர்ந்த மெல்லிய சத்தத்தின்” மூலமாக தேவன் தொடர்புகொள்வது ஏன் என நீங்கள் நினைக்கிறீர்கள்? பரிசுத்த ஆவியின் மெல்லிய சத்தத்தை நாம் எவ்வாறு அடையாளம் காணமுடியும்?

## “எலியாவின் மேலிருந்து கீழேவிழுந்த சால்வையை எடுத்துக்கொண்டு” 29

***2 இராஜாக்கள் 2; 5–6***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. 2 இராஜாக்கள் 2:1–18. எலிசா புதிய தீர்க்கதரிசியாக ஆக அவனை எலியா ஆயத்தப்படுத்துகிறான் (2:1–10). எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டான். எலியாவின் பொறுப்பை எலிசா எடுத்துக்கொண்டு தீர்க்கதரிசியாகிறான் (2:11–15). எலிசாவின் ஆலோசனைக்குப் பின்னும் ஐம்பதுபேர் எலியாவைத் தேடினார்கள் (2:16–18).*

*ஆ. 2 இராஜாக்கள் 5. நாமானின் குஷ்ட ரோகத்தை எலிசா குணமாக்குகிறான் (5:1–14). நாமான் தேவனைத் துதித்து எலிசாவுக்கு ஒரு காணிக்கையைக் கொடுக்கிறான், எலிசா அதை வாங்க மறுக்கிறான் (5:15–19).*

*இ. 2 இராஜாக்கள் 6:8–18. சிரியாவுக்கு எதிரான ஒரு யுத்தத்தில் இஸ்ரவேல் இராஜாவை எலிசா வழிநடத்துகிறான் (6:8–10). எலிசாவைப் பிடிக்கும்படி சிரியாவின் இராஜா அவனது மனிதர்களுக்குக் கட்டளையிடுகிறான் தோத்தானை சேனை சுற்றிவளைக்கிறது (6:11–14). பயமில்லாது எலிசா ஜெபிக்கிறான், அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை கர்த்தர் வெளிப்படுத்துகிறார், பின்னர் சிரியாவின் இராணுவத்தை கண் மயக்கத்தால் தாக்குகிறார் (6:15–18).*

- *நாம் விரும்பாத அல்லது புரிந்துகொள்ளாத அல்லது ஒரு சிறிய காரியம் அல்லது எளிதான காரியங்களைப் பற்றி அது இருந்தபோதிலும் தீர்க்கதரிசியின் ஆலோசனையைப் பின்பற்றுவதைப்பற்றி நாமானின் கதை நமக்கு என்ன போதிக்கிறது? தீர்க்கதரிசியால் அல்லது சபையின் பிற தலைவர்களால் நாம் கேட்டுக்கொள்ளப்படுகிற சில சிறிய, எளிய காரியங்கள் எவை? இந்தக் காரியங்கள் சிலசமயங்களில் செய்வதற்கு ஏன் கடினமானதாயிருக்கிறது? சபைத் தலைவர்களின் ஆலோசனையைப் பின்பற்ற நமது விருப்பத்தை நாம் எவ்வாறு அதிகரிக்கலாம்?*
- *“அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்” என அவன் தனது வேலைக்காரர்களுக்குக் கூறியபோது எலிசா என்ன சொல்லவந்தான்? (2 இராஜாக்கள் 6:16). எலிசா கூறியவை இன்று இன்னமும் உண்மையாயிருப்பதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?*

## “கர்த்தருடைய ஆலயத்திற்கு வாருங்கள்” 30

***2 நாளாகமம் 29–30; 32; 34***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. 2 நாளாகமம் 29–30. யூதாவின் இராஜாவான எசேக்கியா ஆலயத்தின் கதவைத் திறந்து, தொழுகைக்காக அதை சுத்தப்படுத்தவும் பரிசுத்தப்படுத்தவும் ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் அறிவுரை வழங்குகிறான் (29:1–19). ஆலயம் சுத்தப்படுத்தப்பட்டபோது, எசேக்கியாவும் அவனது மக்களும் ஒன்றுகூடி தொழுது கர்த்தரைத் துதித்தார்கள் (29:20–36). எருசலேமிலுள்ள ஆலயத்திற்கு எல்லா இஸ்ரவேலரும் வர எசேக்கியா அழைக்கிறான் (30:1–9). அழைப்பைக் குறித்து சிலர் சிரித்தார்கள், ஆனால் உண்மையுள்ள இஸ்ரவேலர் எருசலேமில் கர்த்தரைத் தொழுதார்கள் (30:10–27).*

ஆ. 2 நாளாகமம் 32:1–23. அசீரியாவின் இராஜாவான சனகெரிப், யூதாவை முற்றுகையிட்டு, கர்த்தருக்கு விரோதமாகப் பேசுகிறான் (32:1–19). உதவிக்காக ஏசாயாவும் எசேக்கியாவும் ஜெபித்து, அசீரியாவின் சேனையின் அதிகமானவற்றை கர்த்தரின் தூதன் ஒருவன் அழிக்கிறான் (32:20–23).

இ. 2 நாளாகமம் 34. எசேக்கியாவின் மகனும் பேரனும் துன்மார்க்கத்தில் ஆட்சிசெய்தபின், எசேக்கியாவின் கொள்ளுப்பேரன் யோசியா யூதாவின் இராஜாவாகிறான். இராஜ்யத்திலுள்ள விக்கிரகங்களை யோசியா அழிக்கிறான், ஆலயத்தைப் பழுதுபார்க்கிறான் (34:1–13). நியாயப்பிரமாணப் புத்தகம் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டு யோசியாவுக்கு அது வாசித்துக் காட்டப்படுகிறது, பிரமாணத்திலிருந்து மக்கள் எவ்வளவுதூரம் விலகியிருக்கிறார்களென்பதை அறிந்து அழுகிறான் (34:14–21). யூதாவிற்கு வரப்போகிற அழிவைக்குறித்து உல்தாள் என்ற தீர்க்கதரிசியானவள் முன்னறிவிக்கிறாள் ஆனால் யோசியா அதைப் பார்க்கமாட்டான் என தீர்க்கதரிசனமுரைக்கிறாள் (34:22–28). யோசியாவும் அவனது மக்களும் கர்த்தருக்கு சேவை செய்ய உடன்படிக்கை செய்கிறார்கள் (34:29–33).

- நமது சொந்த முயற்சிகளில் நம்பிக்கை வைப்பதற்கும் கர்த்தரின் மேல் நம்பிக்கை வைப்பதற்குமிடையிலுள்ள சரியான உறவைப்பற்றி எசேக்கியாவிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? (2 நாளாகமம் 32:7–8 பார்க்கவும்).
- யோசியாவும் அவனது மக்களும் ஆலயத்திலிருந்தபோது, என்ன செய்ய அவர்கள் உடன்படிக்கை செய்தார்கள்? (2 நாளாகமம் 34:31–33 பார்க்கவும்). பரிசுத்த ஆலய உடன்படிக்கைகளைச் செய்ய நாம் எவ்வாறு ஆயத்தப்படமுடியும்? இந்த உடன்படிக்கைகளை ஒருமுறை நாம் செய்தபோது நம்மால் முடிந்த அளவுக்கு அடிக்கடி நாம் ஆலயத்திற்குப்போவது ஏன் முக்கியமானதாயிருக்கிறது?

கூடுதல் படிப்பு: 2 இராஜாக்கள் 18–19; 22–23; ஏசாயா 37:10–20, 33–38.

---

## “ஞானத்தைக் கண்டடைகிற மனுஷன் பாக்கியவான்” 31

*நீதிமொழிகளும் பிரசங்கியும்*

இங்கே கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களைப் படித்து, நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி புத்தகங்களை உங்களால் முடிந்த அளவுக்கு படிக்கவும்.

நீதியாக வாழ்வதைப்பற்றிய ஆலோசனையைக் கொடுக்கிற நீதிமொழிகள் பொதுவாக சுருக்கமான உரைகள். சாலொமோன் “மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்” (1 இராஜாக்கள் 4:32) என பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஞானமுள்ள சில உரைகள் நீதிமொழிகள் புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த புத்தகத்திலுள்ள சாலொமோனும் பிற ஆசிரியர்களும் தீர்க்கதரிசிகளாய் இல்லாவிட்டாலும்கூட அவர்கள் எழுதியவைகளில் அதிகமானவை கர்த்தரால் உணர்த்தப்பட்டது. பிரசங்கி புத்தகத்திலும் ஞானமுள்ள உரைகள் அடங்கியிருக்கிறது, சாலொமோனே இதன் ஆசிரியர் என சிலர் நம்புகிறார்கள்.

- நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி புத்தகங்கள் ஞானத்தை வலியுறுத்துகின்றன. கல்விமானாயிருப்பதற்கும் ஞானமாயிருப்பதற்குமிடையில் என்ன வேறுபாடுகள் இருக்கின்றன? (நீதிமொழிகள் 1:7; 9:9–10; 2 நெப்பி 9:28–29 பார்க்கவும்).
- நீதிமொழிகள் 3:5–7ல் என்ன ஆலோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? கர்த்தரை நம்ப எந்த அனுபவங்கள் உங்களுக்கு கற்றுக்கொடுத்தது?

- *நாம் பேசுகிற வார்த்தைகளில் ஏன் அக்கறை கொண்டிருக்கிறார்? (நீதிமொழிகள் **16:27–28; 18:8; 25:18;** மத்தேயு **12:36–37** பார்க்கவும்). பொய் சொல்லுதல், வம்புபேசுதல், அல்லது மற்றவர்களைப்பற்றி மோசமாகப் பேசுதல் போன்ற பிரச்சினைகளிலிருந்து நாம் எவ்வாறு வெளியே வரமுடியும்?*
- *அகந்தை சச்சரவிற்கும் அழிவிற்கும் நடத்துகிறதென நீதிமொழிகள் **13:10,** மற்றும் **16:18**வது வசனங்கள் போதிக்கின்றன. அகந்தை எப்படி இதைச் செய்கிறது? அகந்தை நமது குடும்பங்களை எவ்வாறு பாதிக்கிறது?*
- *"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து" என நீதிமொழிகள் **22:6** சொல்கிறது. இந்த ஆலோசனையைப் பின்பற்ற பெற்றோர் என்ன செய்யவேண்டும்? (கோ.உ **68:25–28** பார்க்கவும்). சுவிசேஷத்தின் கொள்கைகளை மிகஆற்றலுடன் எவ்வாறு பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க முடியும்?*
- *ஒரு சந்தோஷமான உணர்வையும், ஒரு நல்ல வேடிக்கை உணர்வையும் வளர்ப்பது ஏன் முக்கியமானது? (நீதிமொழிகள் **15:13; 17:22** பார்க்கவும்). நமது குடும்பங்களில் வேடிக்கை உணர்வை உயர்த்தும்படி ஊக்குவிக்க நாம் என்ன செய்யமுடியும்?*

---

## *"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என நான் அறிந்திருக்கிறேன்"* 32

***யோபு 1–2; 13; 19; 27; 42***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. யோபு **1–2.** ஏராளமான துன்பங்களை யோபு அனுபவித்திருக்கிறான். தனது ஆஸ்திகளையும், பிள்ளைகளையும், ஆரோக்கியத்தையும் இழந்தபோதிலும் அவன் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவனாயிருந்தான்.

ஆ. யோபு **13:13–16; 19:23–27.** கர்த்தரில் நம்பிக்கை வைத்திருந்ததிலும் இரட்சகரின்மீதுள்ள அவனது சாட்சியினாலும் யோபு பெலத்தைக் காண்கிறான்.

இ. யோபு **27:2–6.** தனது சொந்த நீதியினிமித்தமும் உத்தமத்தினாலும் யோபு பெலத்தைக் காண்கிறான்.

ஈ. யோபு **42:10–17.** தனது துன்பங்களில் விசுவாசமுள்ளவனான யோபு நிலைத்திருந்த பின் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

- *யோபு எத்தகைய மனிதனாயிருந்தான்? எம்மாதிரியான துன்பங்களை யோபு அனுபவித்தான்?*
- *தனது துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள, இரட்சகரின்மீதிருந்த யோபுவின் சாட்சி எவ்வாறு அவனுக்குதவியது? துயரங்களின்போது இரட்சகரின்மீதுள்ள ஒரு சாட்சி எவ்வாறு நமக்கு பெலன் கொடுக்கமுடியும்?*
- *அவனது துன்பங்களின்போது, ஆவிக்குரிய பெலத்திற்கு யோபுவின் உத்தமம் மற்றொரு ஆதாரமாயிருந்தது (யோபு **27:2–6**). உத்தமம் என்றால் என்ன? தனது சோதனைகளின்போது தனிப்பட்ட உத்தமம் எவ்வாறு யோபுவை பெலப்படுத்தியது? சோதனையின் சமயங்களின்போது தனிப்பட்ட உத்தமம் எவ்வாறு நமக்கு உதவும்?*
- *தனது துன்பங்களை யோபு உண்மையுள்ளவனாக பொறுத்துக்கொண்டபின், கர்த்தர் எவ்வாறு அவனை ஆசீர்வதித்தார்? (யோபு **42:10–15;** யாக்கோபு **5:11** பார்க்கவும்). நமது துன்பங்களை நாம் விசுவாசமுள்ளவர்களாக பொறுத்துக்கொள்ளும்போது கர்த்தர் நம்மை எவ்வாறு ஆசீர்வதிப்பார்? (யோபு **23:10; 3** நெப்பி **15:9** பார்க்கவும்).*

கூடுதல் படிப்பு: யோபுவின் பிற அதிகாரங்கள்; கோட்பாடும் உடன்படிக்கைகளும் **121:1–10.**

## உலகத்தோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் 33

*யோனா 1–4; மீகா 2; 4–7*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. யோனா **1–2.** நினிவேயின் மக்களுக்கு மனந்திரும்புதலைப்பற்றிப் பிரசங்கிக்க யோனாவை கர்த்தர் அழைத்தார். ஒரு கப்பலில் கர்த்தரிடமிருந்து தப்பித்து ஓட அவன் முயற்சித்து, ஒரு பெரிய மீனால் அவன் விழுங்கப்பட்டு, ஜெபித்து, மீனின் வயிற்றிலிருந்து அவன் விடுவிக்கப்படுகிறான்.

ஆ. யோனா **3–4.** நினிவேயின் வீழ்ச்சியைப் பற்றி யோனா தீர்க்கதரிசனமுரைத்து, நினிவேயின் மக்கள் மனந்திரும்பி, கர்த்தர் அந்த பட்டணத்தை விட்டு வைத்தபோது கோபமடைகிறான் (தேவன் அல்ல மக்களே மனந்திரும்பினார்கள் என யோனா **3:9–10**வசனங்களின் ஜோசப் ஸ்மித் மொழிபெயர்ப்பு விவரிக்கிறது). மக்கள் அனைவரையும் நேசிக்க யோனாவுக்கு கர்த்தர் போதிக்கிறார்.

இ. மீகா **2:12–13; 4:1–7, 11–13; 5:2–4, 7–8; 6:6–8; 7:18–20.** கடைசி நாட்களில் இஸ்ரவேலின் ஊழியத்தைப் பற்றி மீகா தீர்க்கதரிசனமுரைக்கிறான்.

- கர்த்தர் ஏன் நினிவேவுக்கு யோனா போகவேண்டுமென்றார்? (யோனா **1:2** பார்க்கவும்). அதற்குப் பதிலாக யோனா ஏன் தர்ஷீசுக்குப் போனான்? (யோனா **1:3** பார்க்கவும்). சுவிசேஷத்தை நாம் ஏன் பகிர்ந்துகொள்ளாதிருக்க தேர்ந்தெடுக்கிறோமென்பதற்கு என்ன சில காரணங்கள்? கர்த்தருக்கு கீழ்ப்படிதலிலும் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்கிறதிலும் மிகத்தைரியமுள்ளவர்களாக இருக்க நமக்குதவும் யோனாவின் கதையிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?
- பிற்கால ஆலயத்தைப்பற்றி மீகா என்ன தீர்க்கதரிசனமுரைத்தான்? (மீகா **4:1–2** பார்க்கவும்).
- நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிற அனைத்தாலும் நாம் மிகஆர்வமுள்ளவர்களாயிருக்கும்போது மீகா **6:6–8**வது வசனங்கள் எவ்வாறு நமக்குதவும்?

## “நீதியில் உன்னை எனக்கு நியமித்துக்கொள்வேன்” 34

*ஓசியா 1–3; 11; 13–14*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. ஓசியா **1–3.** ஒரு உண்மையுள்ள கணவனும் ஒரு விபச்சாரியான மனைவியும் என்ற மறைபொருளைப் பயன்படுத்தி, கர்த்தருக்கும் இஸ்ரவேலுக்குமிடையிலான உறவை தீர்க்கதரிசி ஓசியா விவரிக்கிறான். இந்த அதிகாரங்களில், கர்த்தரை கணவனாகவும், கோமரை இஸ்ரவேலைப் பிரதிபலிக்கிற மனைவியாகவும் ஓசியா அடையாளமாகக் காட்டுகிறான்.

ஆ. ஓசியா **11; 13–14.** அவரது மக்களிடத்தில் அவருக்கிருந்த அன்பினால், மனந்திரும்பவும் அவரிடத்தில் திரும்ப வரவும் இஸ்ரவேலைத் தொடர்ந்து கர்த்தர் அழைக்கிறார்.

- நம்மிடமிருந்து கர்த்தர் எதிர்பார்க்கிற ஒப்புக்கொடுத்தலின் மற்றும் அர்ப்பணிப்பின் அளவைப்பற்றி ஓசியா **1–3** அதிகாரங்களின் ஒப்பிடுதல் நமக்கு எதைக் கற்றுக்கொடுக்கிறது?

- கர்த்தரிடமிருந்து விலக காரணமாயிருந்த காரியங்களான “நேசர்கள்” யார் அல்லது அவைகள் எவை? இரட்சகரைப் பின்பற்றுவதன் நமது அர்ப்பணிப்பிலிருந்து நம்மை எந்த காரியங்கள் வழிவிலகச் செய்கிறது?
- அவனிடத்திற்கு அவள் திரும்பவந்தால் தனது மனைவிக்கு கணவன் என்ன வாக்களித்தான்? (ஓசியா 2:19 பார்க்கவும்). அவர்கள் மனந்திரும்பி அவரிடத்தில் திரும்பவந்தால் தனது மக்களுக்கு கர்த்தர் என்ன வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்? (ஓசியா 1:20, 23 பார்க்கவும்).

கூடுதல் படிப்பு: ஓசியாவின் மீதியுள்ள பகுதிகள்.

---

## தனது தீர்க்கதரிசிகளுக்கு தேவன் தனது இரகசியங்களை வெளிப்படுத்துகிறார் 35

*ஆமோஸ் 3; 7–9; யோவேல் 2–3*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. ஆமோஸ் 3:6–7. தீர்க்கதரிசிகளுக்கு தனது இரகசியங்களை கர்த்தர் வெளிப்படுத்துகிறார் என ஆமோஸ் போதிக்கிறான்.

ஆ. ஆமோஸ் 7:10–17; 8:11–13; 9:8–15. ஒரு தீர்க்கதரிசியாக இருக்க ஆமோஸை தேவன் அழைத்தார் (7:10–15). இஸ்ரவேல் சிறைபிடிக்கப்படுதலையும் அதன் சிதறடிப்பைப்பற்றியும் அவன் தீர்க்கதரிசனமுரைக்கிறான் (7:16–17; 9:8–10). கர்த்தரின் வசனத்தை கேட்கக் கிடைக்காதபடி ஒரு பஞ்சமுண்டாகுமென அவன் தீர்க்கதரிசனமுரைக்கிறான் (8:11–13). கடைசி நாட்களில் இஸ்ரவேல் ஒரு மகத்தான, செழிப்பான மக்களுமாயிருப்பார்களென அவன் தீர்க்கதரிசனமுரைக்கிறான் (9:11–15).

இ. யோவேல் 2; 3:16–17. கடைசி நாட்களின் யுத்தங்களையும் அழிவுகளையும்பற்றி யோவேல் தீர்க்கதரிசனமுரைக்கிறான் (2:1–11). மனந்திரும்பும்படி அவன் மக்களை அழைக்கிறான் (2:12–14; கர்த்தர் அல்ல மக்களே மனந்திரும்பவேண்டுமென ஜோசப் ஸ்மித்தின் மொழிபெயர்ப்பின் வசனங்கள் 13ம் 14ம் விவரிக்கிறதென்பதைக் கவனிக்கவும்). பிற்காலங்களில் தேவன் தனது மக்களை ஆசீர்வதிப்பாரென்றும் அவரது ஆவியை அவர்கள் மேல் ஊற்றுவார் என்றும் யோவேல் தீர்க்கதரிசனமுரைக்கிறான் (2:15–32; 3:16–17).

ஏறக்குறைய கி.மு 800லிருந்து கி.மு 750வரை இஸ்ரவேல் இராஜ்யத்தின் மக்களுக்கு ஆமோஸ் ஊழியம் செய்தான். இந்த மக்களில் அநேகர் மதமாறுபாடிலிருந்தார்கள். அவர்களின் பாவங்களோடு மக்களை ஆமோஸ் எதிர்கொண்டபோது, பயங்கரமான தண்டனைகளைப்பற்றி அவன் தீர்க்கதரிசனமுரைத்தான். ஆயினும், மனந்திரும்புகிற எவரையும் சுத்தப்படுத்த தேவன் ஆவலாயிருக்கிறாரென அவன் வலியுறுத்தினான். பிற்காலங்களைப்பற்றியும் ஆமோஸ் தீர்க்கதரிசனமுரைத்தான்.

யூதாவின் இராஜ்யத்தின் மக்களுக்கு யோவேல் ஊழியம் செய்தான். யோவேலின் அநேக தீர்க்கதரிசனங்கள் பிற்காலங்களைப்பற்றியே இருந்தது.

- தீர்க்கதரிசிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி தீர்க்கதரிசி ஆமோஸ் என்ன போதித்தான்? (ஆமோஸ் 3:7 பார்க்கவும்). தீர்க்கதரிசிகளின் செய்திகளுக்கு நாம் கொடுக்கவேண்டிய மரியாதையைப்பற்றி கோட்பாடும் உடன்படிக்கைகளும் 1:37–38 என்ன போதிக்கிறது?
- தீர்க்கதரிசிகளின் செய்திகளை இஸ்ரவேல் மறுத்தாலோ அல்லது அசட்டை செய்தாலோ வரும் விளை

வுகளைப்பற்றி ஆமோஸின் தீர்க்கதரிசனம் என்ன சொல்கிறது? (8:11–13 பார்க்கவும்). கர்த்தரின் வசனம் கிடைக்காமல்போவது எந்த வழிகளில் பஞ்சத்திற்கு ஒப்பிடப்படலாம்? மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களிருப்பது எவ்வாறு ஒரு விருந்துக்கு ஒப்பிடப்படலாம்?

- யோவேல் 2:12–32 மற்றும் 3:1–17வது வசனங்களைப் பரிசீலனை செய்து, பின்வரும் கேள்விகளுக்கு பதில்களை தேடவும்: பிற்காலங்களில் வாழ்கிறவர்களுக்கு கர்த்தர் எம்மாதிரியான அழைப்புகளைக் கொடுத்திருக்கிறார்? பிற்காலங்களில் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு கர்த்தர் என்ன ஆசீர்வாதங்களை வாக்களித்திருக்கிறார்?

கூடுதல் படிப்பு: ஜோசப் ஸ்மித்–வரலாறு 1:41; கோட்பாடும் உடன்படிக்கைகளும் 1:14–28, 37–38.

## ***சீயோனின் மகிமை ஒரு பாதுகாப்பாயிருக்கும்*** **36**

***ஏசாயா 1–6***

*ஏசாயா 1–6 படிக்கவும்*

*இரட்சகரின் பூலோக ஊழியத்தைப்பற்றி, இஸ்ரவேலின் துன்மார்க்கத்தைத் தொடர்ந்து வரும் அழிவுகளைப்பற்றி, பிற்கால இஸ்ரவேலின் ஊழியம் மற்றும் இலக்கைப்பற்றி அநேக காரியங்களை ஏசாயா தீர்க்கதரிசனமுரைத்தான்.*

- *ஏசாயாவின் அநேக எச்சரிக்கைகளும் தீர்க்கதரிசனங்களும், மிகப்பெரிய துன்மார்க்கத்தின் காலமான அவனது காலத்திற்கும் நமது காலத்திற்கும் பொருந்துகிறது. ஏசாயா 1–5வது வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலைகள் இன்றைய உலகத்திற்கு எவ்வாறு சரியாக இருக்கிறது?*
- *தீமையிலிருந்து பாதுகாப்பைக் கொடுக்கிற, ஏசாயா 4:5–6வது வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற மூன்று பரிசுத்த ஸ்தலங்கள் எவை? இந்த பரிசுத்த ஸ்தலங்கள் நம்மை எவ்வாறு பாதுகாக்குமென்பதை விவரிக்க இந்த வசனங்களில் என்ன பதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன?*

*கூடுதல் படிப்பு: 2 நெப்பி 11.*

## ***“நீர் அதிசயமானவைகளைச் செய்தீர்”*** **37**

***ஏசாயா 22; 24–26; 28–30***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. ஏசாயா 22:22. பரலோகப் பிதாவின் பிரசன்னத்திற்கு இரட்சகர் கதவைத் திறக்கிறார்.*

*ஆ. ஏசாயா 24:21–22. ஆவிச் சிறையிலிருப்பவர்களுக்கு இரட்சகர் இரக்கம் காட்டுகிறார்.*

*இ. ஏசாயா 25:1–4; 32:1–2. இரட்சகர் பெலனும் அடைக்கலமுமாயுமிருக்கிறார்.*

*ஈ. ஏசாயா 25:6–9. இரட்சகர் ஒரு விருந்தை ஏற்படுத்தி “திரையை” கிழித்துப்போடுவார்.*

*உ. ஏசாயா 25:8. இரட்சகர் நமது கண்ணீரைத் துடைப்பார்.*

*ஊ. ஏசாயா 26:19. இரட்சகர் உயிர்த்தெழுதலைக் கொண்டுவருவார்.*

*எ. ஏசாயா 28:16. இரட்சகரே நமது உறுதியான அஸ்திபாரம்.*

ஏ. ஏசாயா 29:4; 9–14, 18, 24. இரட்சகர், பூமியின்மேல் சுவிசேஷத்தை மறுஸ்தாபிப்பார்.

ஐ. ஏசாயா 30:19–21. நமது துன்பங்களைப்பற்றி இரட்சகர் அறிந்திருந்து நமது பாதைகளில் நம்மை வழிநடத்துவார்.

- இரட்சகர் எவ்வாறு “நமது கண்ணீரைத் துடைப்பார்”? (ஏசாயா 25:8).
- மேசியா வரும்போது அவர் மரித்து உயிர்த்தெழுவார் என ஏசாயா தீர்க்கதரிசனமுரைத்தான் (ஏசாயா 25:8). யாரெல்லாம் உயிர்த்தெழுவார்கள்? (ஏசாயா 26:19; 1 கொரிந்தியர் 15:20–22; ஆல்மா 11:43–44). நாம் உயிர்த்தெழும்போது நாம் எவ்வாறு உணர்வோமென்பதைப்பற்றி ஏசாயா 26:19வது வசனத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? (கோ.உ 138:12–16, 50 ஐயும் பார்க்கவும்).

ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களில் சில எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்பதைப் பார்க்க ஏசாயா 29வது அதிகாரத்திலுள்ள பின்வரும் வசனங்களுடன் அதற்கு சம்பந்தமான பகுதிகளை ஒப்பிடவும்:

| | |
|---|---|
| ஏசாயா 29:4 | மரோனி 10:27 |
| ஏசாயா 29:9–10, 13 | ஜோசப் ஸ்மித்–வரலாறு 1:18–19 |
| ஏசாயா 29:11–12 | ஜோசப் ஸ்மித்—வரலாறு 1:63–65 |
| ஏசாயா 29:14 | கோட்பாடும் உடன்படிக்கைகளும் 4:1; 6:1 |

- தங்கள் வாய்களினால் அவர்கள் கர்த்தரிடத்தில் சேர்கிறார்களென்றும் தங்கள் இருதயங்களோ அவருக்குத் தூரமாய் விலகியிருக்கிறதென்றும் மக்களிடம் ஏசாயா கூறினான் (ஏசாயா 29:13). நமது சிந்தனைகளிலும் செயல்களிலும் அப்படியே நமது வார்த்தைகளிலும் நாம் கர்த்தருக்கு நெருக்கமாயிருக்கிறோமென்பதை எவ்வாறு நாம் நிச்சயப்படுத்தலாம்?

## “என்னையல்லாமல் இரட்சகர் இல்லை” 38

*ஏசாயா 40–49*

ஏசாயா 40–49 படிக்கவும்

- ஏசாயா 40:28–31; 42:16; 43:1–4; 44:21–23; மற்றும் 49:14–16. ஒவ்வொரு பகுதியையும் நீங்கள் படிக்கும்போது, பின்வரும் கேள்விகளுக்கு பதில்களைத் தேடவும். இந்தப் பகுதியில் இரட்சகரின் எந்த எண்ணம் குறிப்பிடப்பட்டிருக்கிறது? இந்த எண்ணத்தை அறிந்துகொள்வதில் இரட்சகரிடத்தில் நமது விசுவாசத்தை அதிகரிக்க அது எவ்வாறு உதவுகிறது?
- உலகத்தின் துன்மார்க்கத்திற்கான ஒரு அடையாளமாக வேதங்களில் அடிக்கடி பாபிலோன் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உலகத்தின் வழிகளைத் தேடுவதில் என்ன விளைவுகள் வருகிறது? (ஏசாயா 47:1, 5, 7–11 பார்க்கவும்). உலகத்தைவிட அவரை நாடுகிறவர்களுக்கு கர்த்தர் என்ன வாக்களித்திருக்கிறார்? (ஏசாயா 48:17–18 பார்க்கவும்).
- ஏசாயா 49வது அதிகாரத்திலுள்ள அநேக தீர்க்கதரிசனங்கள் இரட்சகரின் மற்றும் அவரது ஊழியக்காரர்களின் பணி இரண்டிற்கும் பொருந்துகிறது. பிற்காலங்களில் நமது பொறுப்புகளைப்பற்றி ஏசாயா 49:1–6வது வசனங்கள் எதைப்போதிக்கிறது?

## *“மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன”* 39

***ஏசாயா 50–53***

*ஏசாயா 50–53 படிக்கவும்*

- *இரட்சகரின் வாழ்க்கையைப்பற்றி ஏசாயா 53:2–5வது வசனங்கள் நமக்கு எதைப் போதிக்கிறது? நமது துக்கங்களையும் நமது வேதனையையும் ஏன் அவர் புரிந்துகொள்வதில்லை? (ஆல்மா 7:11–13; எபிரெயர் 2:16–18; 4:15 பார்க்கவும்). உங்கள் துக்கங்களையும் வேதனையையும் அவர் புரிந்துகொள்கிறாரென எவ்வாறு நீங்கள் உணர்கிறீர்கள்? காயப்படுதலின், அடிக்கப்படுதலின், சவுக்கால் அடிக்கப்படுதலின் வேதனையை ஏன் இரட்சகர் பாடனுவித்தார்? (1 நெப்பி 19:9 பார்க்கவும்).*
- *இரட்சகரின் பாவநிவர்த்தியுடன் சம்பந்தப்பட்ட ஒரு ஏராளமான சம்பவங்களைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசனமுரைத்தான். இரட்சகரின் அன்பை மற்றும் அவரது பாவநிவர்த்தியின் பலியைப்பற்றி பின்வரும் வசனங்கள் என்ன போதிக்கின்றன?*

  *ஏசாயா 50:5–7 (மத்தேயு 26:39; பிலிப்பியர் 2:8ஐயும் பார்க்கவும்)*

  *ஏசாயா 51:6 (மோசியா 16:9; ஆல்மா 34:10ஐயும் பார்க்கவும்).*

  *ஏசாயா 53:2–4 (ஆல்மா 7:11–13; எபிரெயர் 2:16–18ஐயும் பார்க்கவும்).*

  *ஏசாயா 53:8–11 (மோசியா 15:10–13ஐயும் பார்க்கவும்).*

*கூடுதல் படிப்பு: மோசியா 14–15*

## *“உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு”* 40

***ஏசாயா 54–56; 63–65***

*ஏசாயா 54–56; 63–65*

- *சபையை ஒரு கூடாரத்திற்கும் சபையின் பிணையங்களை கூடார பிணையங்களுக்கும் ஏசாயா ஒப்பிட்டான் (ஏசாயா 54:2). சபையைப்பற்றியும் பிணையங்களைப்பற்றியும் அவன் என்ன ஆலோசனையைக் கொடுத்தான்? (ஏசாயா 54:2–3 பார்க்கவும்). நாம் வாழ்கிற பிணையத்தை பெலப்படுத்த நாம் என்ன செய்யலாம்?*
- *மழையும் பனியும் விதைகளை போஷிப்பதைப்போல, தேவனின் வார்த்தைகள் நமது ஆத்துமாக்களை போஷிக்குமென ஏசாயா எழுதினான் (ஏசாயா 55:10–13). நமது ஆத்துமாக்களை தேவனின் வார்த்தை எவ்வாறு போஷிக்கும்? (ஆல்மா 32:28 பார்க்கவும்).*
- *ஏசாயா 65:17–25வது வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறதைப்போல, ஆயிரம் வருஷத்தின்போது நிலைமைகள் எவ்வாறிருக்கும்?*

## *“நான் உன்னை இன்றையதினம் . . . இருப்புத்தூணாக ஆக்கினேன்”* 41

***எரேமியா 1–2; 15; 26; 36–38***

*எரேமியா 1–2; 15; 20; 36–38 படிக்கவும்.*

*ஐந்து இராஜாக்களின் ஆட்சியின்போது கி.மு 626லிருந்து கி.மு 586வரை ஏசாயா ஊழியம் செய்தான் (யோசியாவிலிருந்து சிதேக்கியா வரை). யோசியாவுடன் சேர்ந்து விக்கிரகாரதனையிலிருந்தும் ஒழுக்கக்கேட்டிலிருந்தும் மக்களை மாற்ற*

*அவன் முயற்சித்தான். எரேமியாவின் வாழ்க்கை முழுவதும் துன்பத்திலிருந்தது, ஆனால் துயரங்களை அவன் எதிர் கொண்டது நம்மை ஊக்குவிக்கலாம். யூதாவின் இராஜ்யத்திற்கு எதிராக தீர்க்கதரிசனமுரைத்ததற்காக அவன் அடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டான். அவனது உயிர் தொடர்ந்து பயமுறுத்தப்பட்டது. ஆயினும் துயரங்கள் எதிர்ப்புகள் எல்லாவற்றினூடே அவன் ஒரு "இருப்புத்தூணைப்" (எரேமியா 1:18) போலிருந்தான். தனது வாழ்வின் துக்கத்திற்கும் ஏமாற்றத்திற்கும் இந்த தீர்க்கதரிசியின் ஒரு தனிப்பட்ட, விசுவாசத்தை விருத்திசெய்யும் மறுஉத்தரவின் குறிப்பை எரேமியா புத்தகம் கொடுக்கிறது.*

- *முன்நியமிப்பின் கோட்பாட்டைப் பற்றி எரேமியாவின் அழைப்பு நமக்கு என்ன போதிக்கிறது? (எரேமியா **1:5** பார்க்கவும்).*
- *கர்த்தரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை அவன் நிறைவேற்றும்போது எரேமியாவுக்கு என்ன எதிர்ப்பு வந்தது? (எரேமியா **20:1–6; 26:7–15; 36:1–6, 20–24, 27–32; 37:12–16; 38:4–13** பார்க்கவும்).*
- *துன்பத்தை நாம் அனுபவிக்கும்போது நமக்குதவ எரேமியாவிடமிருந்து எதை நாம் கற்றுக்கொள்ளலாம்?*
- *எரேமியா **20:9**வது வசனத்தில் அவனுக்குள்ளிருந்த கர்த்தரின் வார்த்தையை எரேமியா எவ்வாறு விவரித்தான்? கர்த்தரின் வார்த்தை, உங்கள் எலும்புகளில் ஒரு எரியும் நெருப்பாக இருப்பதற்கு என்ன அர்த்தமென நீங்கள் நினைக்கிறீர்கள்?*

## *"அதை அவர்கள் இருதயத்திலே நான் எழுதினேன்"* **42**

***எரேமியா 16; 23; 31***

*எரேமியா **16; 23; 29; 31** படிக்கவும்.*

- *எரேமியா **31:31–34**வது வசனங்களில் எழுதப்பட்டிருப்பதைப்போல, பிற்காலங்களில் என்ன செய்வேன் என கர்த்தர் வாக்களித்திருக்கிறார்? (எசேக்கியல் **11:17–20, 36:24–28; 2** கொரிந்தியர் **3:2–3**ஐயும் பார்க்கவும்). தேவனின் பிரமாணம் உங்கள் இருதயங்களில் எழுதப்பட்டிருப்பதென்றால் என்ன அர்த்தம்? தேவனின் பிரமாணம் நம் இருதயங்களில் எழுதப்பட நாம் என்ன செய்யவேண்டும்? நமது இருதயங்களில் தேவனின் பிரமாணம் எழுதப்படும்போது நமது நடத்தை எவ்வாறு பாதிக்கப்படும்?*
- *எரேமியா **29:12–14**வது வசனங்களின்படி, தேவனிடத்தில் நெருங்கிவர நாம் என்ன செய்யலாம்?*

*கூடுதல் படிப்பு: எரேமியா **3–9; 13; 30; 32:37–42; 33; 35***

## *இஸ்ரவேலின் மேய்ப்பர்கள்* **43**

***எசேக்கியல் 18; 34; 37***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. எசேக்கியல் **34.** மந்தையை போஷிக்காத மேய்ப்பர்களை கர்த்தர் கண்டிக்கிறார். காணாமல்போன எல்லா ஆடுகளையும் அவர் கண்டுபிடித்து அவைகளுக்கு மேய்ப்பராயிருப்பார்.*

*ஆ. எசேக்கியல் **18:21–32.** மனந்திரும்புகிற துன்மார்க்கர்கள் இரட்சிக்கப்படுவார்கள் மேலும் துன்மார்க்கத்திற்கு திரும்பிய நீதிமான்கள் வெளியேற்றப்படுவார்கள் என எசேக்கியல் போதிக்கிறான்.*

இ. எசேக்கியல் 37:1–14. அநேக உலர்ந்து போன எலும்புகள் உயிர்பெறுவதன் ஒரு தரிசனத்தை எசேக்கியல் காண்கி றான்.

ஈ. எசேக்கியல் 37:15–28. யூதாவின் கோலும் யோசேப்பின் கோலும் கர்த் தரின் கையில் ஒன்றாகுமென எசேக் கியல் தீர்க்கதரிசனமுரைக்கிறான்.

கி.மு 597வது ஆண்டில், யூதாவின் இராஜ் யத்திலிருந்து அநேக மக்களை, பாபி லோனின் நெபுகாத்நேச்சார் இராஜா சிறைபிடித்துக்கொண்டுபோனான். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு தீர்க்கதரிசி யாக கர்த்தர் அழைத்த எசேக்கியலும் இந்த கைதிகளில் ஒருவனாயிருந்தான். நாடுகடத்தப்பட்ட அவனது மக்களுக்கு கி.மு 570வது ஆண்டுவரை எசேக்கியல் ஊழியம் செய்தான்.

கண்டிப்புகள் மற்றும் வாக்களிப்புகள் அடங்கியிருக்கிற எசேக்கியல் எழுதியவைகள் இன்றைய சபை அங்கத்தி னர்களையும் சேர்த்து, பழங்கால யூதாவின் இராஜ்யத்திற்கு மட்டுமல்ல இஸ்ரவேல் முழுவதற்கும் பொருந்து கிறது. எருசலேம் அழிக்கப்பட்டாலு ம்கூட, இஸ்ரவேல் கூட்டிச்சேர்க்கப்பட்டு மறுஸ்தாபிதம் செய்யப்படும் ஒரு நாளை எசேக்கியல் முன்பே கண்டான்.

- எசேக்கியல் 34வது அதிகாரத்தில் “இஸ்ரவேலின் மேய்ப்பர்கள்” என யாரைப்பற்றி பேசப்படுகிறது? எந்த வழிகளில் நாம் ஒவ்வொருவரும் இஸ்ர வேலின் ஒரு மேய்ப்பனாக கருதப்பட லாம்?
- இரட்சகர் நமக்கு எவ்வாறு ஒரு மேய்ப் பரைப்போலிருக்கிறார்? (எசேக்கியல் 34:11–16; சங்கீதம் 23 பார்க்கவும்).
- “ஒரு புது இருதயத்தையும் ஒரு புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொள் ளுதல்” என்றால் என்ன அர்த்தம்”? (எசேக்கியல் 18:31). இந்த இருத யத்தின் மாற்றத்தை நாம் எவ்வாறு அனுபவத்தில் காணலாம்? (ஆல்மா 5:7–14 பார்க்கவும்).
- எசேக்கியல் 37:15–28வது வசனங் களில் எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிச னத்தில், ஒரு காரியமான, யூதாவின் கோல், வேதாகமத்தைப் பிரதிபலிக் கிறது. ஒரு காரியமான, யோசேப்பின் கோல் மார்மன் புத்தகத்தைப் பிரதிப லிக்கிறது. வேதாகமத்தோடு மார்மன் புத்தகம் சேருவதிலிருந்து என்ன ஆசீர் வாதங்கள் வந்தது?

கூடுதல் படிப்பு: எசேக்கியல் 2.

---

## “நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்” 44

*எசேக்கியல் 43–44; 47*

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. எசேக்கியல் 43:1–12; 44:6–9, 23. எருசலேமிலுள்ள ஆலயத்தின் ஒரு தரிசனம் எசேக்கியலுக்குக் காட்டப் பட்டது.

ஆ. எசேக்கியல் 47:1, 6–12. வனாந்தரத் திற்கு உயிர் கொடுக்கிற, உப்புக்க டலை ஆரோக்கியமாக்குகிற ஒரு நதி ஆலயத்திலிருந்து பாய்ந்து ஓடுவதை எசேக்கியல் காண்கிறான்.

இ. எசேக்கியல் 47:2–5. நதியின் ஆழத்தை எசேக்கியல் அளந்து, அதை கடந்து போகும் ஒவ்வொரு முறையும் தண்ணீர் மிகஆழமாக இருப்பதை அவன் கண்டுபிடித்தான்.

- எசேக்கியல் 43:1–12 மற்றும் 44:6–9, 23வது வசனங்களிலிருந்து ஆலயத் தைப்பற்றி நீங்கள் என்ன அறிந்து கொண்டீர்கள்?
- ஆலயத்திலிருந்து தண்ணீர் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்ததால், எசேக்கி

*யலின் தரிசனத்தின்படி, எருசலேமிற்கு கிழக்குப்பக்கமான யூதாவின் வனாந்தரத்திலும் சவக்கடலிலும் என்ன மாற்றங்கள் நிகழும்? (எசேக்கியல் 47:6–12 பார்க்கவும்). ஆலயத்திலிலுள்ள தண்ணீர் எவ்வாறு குணப்படுத்தி, திருமணங்களுக்கு, குடும்பங்களுக்கு, நமது முன்னோர்களுக்கு, சபைக்கு உயிர் கொடுக்க முடியும்?*

*எசேக்கியல் 47:1, 6–12வது வசனங்களில் எழுதப்பட்டிருப்பவைகளை நீங்கள் படிக்கும்போது, வெளிப்பாடு 22:1–3, மற்றும் 1 நெப்பி 8:10–11; 11:25வது வசனங்களையும் படிக்க நீங்கள் விரும்பலாம். இந்த பகுதிகளில் அதைப்போன்ற விவரங்களை கவனிக்கவும்.*

---

## *“நான் செத்தாலும் சாகிறேன்”* 45

***தானியேல் 1; 3; 6; எஸ்தர் 3–5; 7–8***

பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:

அ. தானியேல் 1. தானியேலும் அவனது நண்பர்களும் நேபுகாத்நேச்சார் இராஜாவின் உணவை உண்ண மறுத்தார்கள் (1:1–16). நல்ல ஆரோக்கியத்துடனும் ஞானத்துடனும் தானியேலையும் அவனது நண்பர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார் (1:17–21).

ஆ. தானியேல் 3. நேபுகாத்நேச்சாரின் விக்கிரகத்தை சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ வணங்க மறுத்தார்கள் (3:1–12). அவர்களை நேபுகாத்நேச்சார் இராஜா ஒரு அக்கினிச்சூளையில் போட்டான், கர்த்தர் அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றுகிறார் (3:13–30).

இ. தானியேல் 6. 30 நாட்களுக்கு எல்லா விண்ணப்பங்களும், வேறெந்த மனிதன் அல்லது தேவனுக்குப் பதிலாக, அவனிடம் கொடுக்கப்பட வேண்டுமென ஒரு கட்டளையை கையொப்பமிட தரியுவின் மனிதர்கள் இராஜாவை வற்புறுத்தினார்கள் (6:1–9). இராஜாவின் கட்டளைக்கும் மேலாக, தானியேல் தேவனிடம் ஜெபித்தான் (6:10–13). கட்டளைக்குக் கீழ்ப்படியாததன் தண்டனையாக, சிங்கங்களின் ஒரு கெபியில் தானியேல் தூக்கி எறியப்பட்டான் (6:14–17). தானியேலைக் காப்பாற்ற ஒரு தூதனை கர்த்தர் அனுப்புகிறார் (6:18–23).

ஈ. எஸ்தர் 3–5; 7–8. எஸ்தரின் ஒன்றுவிட்ட சகோதரனான மொர்தெகாய், ஆமானுக்குத் தலைவணங்க மறுத்தான் (3:1–4). இராஜ்யத்திலுள்ள எல்லா யூதர்களின் மரணத்திற்கு தேவையான ஒரு கட்டளையை ஆயத்தப்படுத்த அகாஸ்வேரு இராஜாவை ஆமான் வலியுறுத்தினான் (3:5–14). ஆமானின் திட்டத்தைப்பற்றி எஸ்தர் அறிந்து, அகஸ்வேரு இராஜாவிடம் உதவிகேட்கப் போக தனது உயிரை பணயம் வைக்கிறாள் (4:1–17). ஆமானுடன் ஒரு விருந்திற்கு வர எஸ்தரின் வேண்டுகோளை இராஜா நிறைவேற்றுகிறான் (5:1–8). யூதர்களைக் கொலை செய்ய ஆமானின் திட்டத்தை விருந்தில் எஸ்தர் தெரிவிக்கிறாள் (7:1–6). ஆமானை இராஜா தூக்கிலிடுகிறான் (7:7–10). மொர்தெகாயை இராஜா கௌரவித்து, ஆமானின் கட்டளையை நீக்குமாறு கொடுக்கப்பட்ட எஸ்தரின் கோரிக்கையை நிறைவேற்றுகிறான் (8:1–17).

எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு, ஒரு இளம் சிறுவனாக தானியேல் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டான். அவனது நண்பர்களான சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோவையும் சேர்த்து பிற திறமையான எபிரெய வாலிபர்களும் நேபுகாத்நேச்சார் இராஜாவின் அரண்மனையில் பயிற்சியளிக்கப்பட்டிருந்தார்கள்.

தானியேலின் காலத்திற்குப் பின் வாழ்ந்த எஸ்தர் ஒரு யூதப்பெண்ணாயிருந்தாள்.

*அவளது பெற்றோர் மரித்தபின்பு, மொர்தெகாய் என்ற அவளது ஒன்றுவிட்ட சகோதரனால் அவள் வளர்க்கப்பட்டாள். எஸ்தர் மிகஅழகாயிருந்தாள், பெர்சியா மற்றும் மேதியாவின் இராஜாவான அகாஸ்வேரு அவளது அழகில் மகிழ்ச்சியடைந்து அவளை தனது இராணியாக்கினான்.*

- *இராஜாவின் இறைச்சியும் திராட்சைரசமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபோது தானியேலும் அவனது நண்பர்களும் என்ன ஆலோசித்தார்கள்? (தானியேல் 1:8–14 பார்க்கவும்). ஞானவார்த்தைக்கு நாம் கீழ்ப்படிந்தால் நமக்குக்கொடுக்கப்பட்ட கர்த்தரின் வாக்குத்தத்தங்களைப்போலவே எவ்வாறு அவர்களின் ஆசீர்வாதங்களிருந்தன? (தானியேல் 1:15, 17, 20; கோ.உ 89:18–20 பார்க்கவும்).*
- *சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோவை அக்கினிச்சூளையில் போட்டபோது என்ன நடந்தது? (தானியேல் 3:21–27 பார்க்கவும்). அக்கினிச்சூளையில் அவர்களோடு யார் இருந்தார்கள்? (தானியேல் 3:25 பார்க்கவும்). நமது சோதனைகளின்போது இரட்சகரிடத்தில் நாம் திரும்பும்போது எவ்வாறு அவர் நமக்கு உதவுகிறார்?*
- *எஸ்தரைப்போல துணிவு அவசியமான என்ன சவால்களை இன்று நாம் எதிர்கொள்கிறோம்? கடினமான விளைவுகளை நாம் எதிர்கொள்ளும்போதும்கூட எது சரியோ அதைச் செய்ய நாம் முயற்சிக்கும்போது என்ன ஆசீர்வாதங்களை நாம் பெறுவோம்?*

*கூடுதல் படிப்பு: எஸ்தர் 1–2; 6; 9–10.*

---

## “என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்யம்” **46**

***தானியேல் 2***

*பின்வரும் வேதவசனங்களைப் படிக்கவும்:*

*அ. தானியேல் 2:1–23. நேபுகாத்நேச்சார் இராஜா ஒரு சொப்பனத்தைக்கண்டு அதன் விவரத்தையும் அர்த்தத்தையும் கூறும்படி தனது ஆலோசகர்களுக்குக் கட்டளையிட்டான் (2:1–13). தனது நண்பர்களுடன் தானியேல் ஜெபித்து, சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் தேவன் அவனுக்கு வெளிப்படுத்துகிறார் (2:14–13).*

*ஆ. தானியேல் 2:24–49. பூமியின் மகத்தான இராஜ்யங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியைப்பற்றியும், மற்ற அனைத்து இராஜ்யங்களின்மேல் தேவனின் இராஜ்யத்தின் பிற்கால வெற்றியையும் பற்றியும் நேபுகாத்நேச்சார் இராஜாவின் சொப்பனம் முன்னறிவிக்கிறதென தானியேல் வெளிப்படுத்துகிறான்.*

- *இ. தனது சொப்பனத்தில் இராஜா கண்ட பெரிய உருவத்தை எவ்வாறு தானியேல் விவரித்தான்? (தானியேல் 2:31–33 பார்க்கவும்). உருவத்தின் வெவ் வேறு பாகங்கள் எதை பிரதிபலிக்கிறது? (தானியேல் 2:36–43 பார்க்கவும்).*
- *“கையால் பெயர்க்கப்படாத கல்” எதை பிரதிபலிக்கிறது? (தானியேல் 2:44–45; கோ.உ 65:2 பார்க்கவும்). பிற்காலங்களின் சபையைப்பற்றி தானியேலின் தீர்க்கதரிசனம் என்ன? (தானியேல் 2:34–35, 44 பார்க்கவும்). சபை “பூமி முழுவதையும் நிரப்பும்” மற்றும் “என்றென்றைக்கும் அழிக்கப்படுவதில்லை” என்ற தானியேலின் தீர்க்கதரிசனம் இன்று எவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக்கிறது?*

*கூடுதல் படிப்பு: கோட்பாடும் உடன்படிக்கைகளும் 65*

# *“எழுந்து கட்டுவோம் வாருங்கள்”* **47**

***எஸ்றா 1–8; நெகேமியா 1–2; 4; 6; 8***

*பின்வரும் வேதவசனங்களை ஜெபத்துடன் படிக்கவும்:*

*அ. எஸ்றா **1–6**. பாபிலோனில் சிறைக்கைதிகளாக இருந்த யூதர்களை கோரேஸ் இராஜா விடுவித்து, எருசலேமுக்கு திரும்பவந்து ஆலயத்தை மீண்டும் கட்டுமாறு அவர்களை அழைக்கிறான் (எஸ்றா **1**). ஏறக்குறைய **50,000** மக்களை செருபாபேலும் யெசுவாவும் எருசலேமுக்கு திரும்ப நடத்தி, அவர்கள் ஆலயத்தை மீண்டும் கட்ட ஆரம்பிக்கிறார்கள் (எஸ்றா **2–3**). ஆலயத்தின் பணிக்கு உதவுவதாக சமாரியர்கள் கூறி பின்னர் உதவாமல் பணியை நிறுத்த முயற்சித்தார்கள்; அதனால் கட்டுவது நிறுத்தப்பட்டது (எஸ்றா **4**). அநேக ஆண்டுகளுக்குப் பின்னர், ஆலயத்தைக் கட்டிமுடிக்கும்படி யூதர்களை ஆகாய் தீர்க்கதரிசியும் சகாரியாவும் ஊக்குவித்தார்கள்; சமாரியர்கள் அதைத் தொடர்ந்து எதிர்த்தார்கள் (எஸ்றா **5**; ஆகாய் **1**ஐயும் பார்க்கவும்). ஆலயத்தை மீண்டும் கட்ட கொடுக்கப்பட்ட கட்டளையை தரியு இராஜா புதுப்பிக்கிறான், ஆலயம் முடிக்கப்பட்டு சுமார் கி.மு **515**வது ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்படுகிறது (எஸ்றா **6**).*

*ஆ. எஸ்றா **7–8**. எருசலேமுக்கு மற்றொரு யூதர் குழுவை திரும்ப நடத்திச்செல்ல, பெர்சியாவின் அர்த்தசஷ்டா இராஜாவிடமிருந்து எஸ்றா அனுமதி பெறுகிறான். எஸ்றாவும் அவனது மக்களும் உபவாசித்து ஜெபம் செய்து கர்த்தர் அவர்களை பாதுகாக்கிறார்.*

*இ. நெகேமியா **1–2; 4; 6**. எருசலேமுக்கு திரும்பிய யூதர்கள் “மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள்” என்று அறிந்ததில் எருசலேமுக்குத் திரும்பப்போய் பட்டணத்து சுவர்களை மீண்டும் கட்டிஎழுப்ப அர்த்சஷ்டா இராஜாவிடமிருந்து நெகேமியா அனுமதிபெறுகிறான் (நெகேமியா **1–2**). சுவர்களை கட்டுவதிலிருந்து யூதர்களை தடுக்க அவர்களின் எதிரிகள் முயற்சிக்கிறார்கள். சுவர்கள் கட்டி முடிக்கப்படும்வரை நெகேமியா பணியை தொடர்ந்து முன்னேற வைக்கிறான் (நெகேமியா **4;6**).*

*ஈ. நெகேமியா **8**. எருசலேமைச் சுற்றி சுவர்கள் திரும்பக் கட்டப்பட்டபின், மக்களுக்கு வேதங்களை எஸ்றா படிக்கிறான். மக்கள் அழுது பிரமாணத்தின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய விரும்பினார்கள்.*

*கி. மு **562**வது ஆண்டில் நேபுகாத்நேச்சார் மரித்தபின், அதிகாரத்திலிருந்து பாபிலோனியா மிகவேகமாக விழுந்தது. கோரேசின் தலைமையின் கீழ் இணைந்த மேதியரிடமும் பெர்சியரிடமும் கி.மு **539**வது ஆண்டில் பாபிலோன் வீழ்ந்தது (தானியேல் **5**பார்க்கவும்). நேபுகாத்நேச்சாரைப் போலில்லாமல், சிறைபிடிக்கப்பட்ட மக்களை அன்புடன் நடத்தி, அவர்களின் மதங்களுக்கு மரியாதையளித்த கோரேஸ் ஒரு தாராளமான ஆட்சியாளனாக இருந்தான்.*

*பாபிலோனை கைப்பற்றிய உடனேயே, எருசலேமுக்கு திரும்பும்படியும் ஆலயத்தை திரும்பக் கட்டுமாறும் யூதர்களை (இஸ்ரவேலர்கள்) தனது இராஜ்யத்திற்கு கோரேஸ் அழைத்தான்.*

*கி.மு **458**வது ஆண்டில், பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்ப மற்றொரு யூதர் குழுவை, யூத ஆசாரியனும் எழுத்தாளனுமான எஸ்றா கொண்டுவந்தான். எருசலேமின் சுவர்களை திரும்பக்கட்ட அவனுக்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு இராஜாங்க கட்டளையை பாபிலோன் இராஜாவின் அரண்மனையில் பானபாத்திரக்காரன் அலுவலகத்தில் முக்கிய பதவியிலிருந்த ஒரு யூதனான நெகேமியா பெற்றான். இந்தப் பணியை யூதர்கள் முடிப்பதற்கு அவர்களுக்குதவ நெகேமியாவும் எஸ்றாவும் ஒன்றுசேர்ந்து பணியாற்றினார்கள்.*

- *வேலையை நிறுத்துமாறும் அவனை வந்து சந்திக்குமாறும் நெகேமியாவை சன்பல்லாத்து கேட்டபோது அவன் என்ன செய்தான்? (நெகேமியா 6:1–4 பார்க்கவும்). கர்த்தரின் இன்றைய பணியை செய்வதிலிருந்து சபை அங்கத்தினர்களை எவ்வாறு சிலமக்கள் வழிதிருப்ப முயற்சிக்கிறார்கள்? அத்தகைய வழிதிருப்பும் முயற்சிகளுக்கு நாம் எவ்வாறு செயல்படவேண்டும்?*
- *வேதங்களை மக்களுக்கு எஸ்றா எவ்வளவு நேரமாக வாசித்தான்? (நெகேமியா 8:3, 17–18 பார்க்கவும்). மக்கள் எவ்வாறு செயல்பட்டார்கள்? (நெகேமியா 8:3, 6, 9, 12 பார்க்கவும்). வேதங்களைப் படிப்பதில் நாம் எவ்வாறு மிகக்கவனமாக இருக்கமுடியும்? வேதங்கள்மீது இந்த மக்களுக்கிருந்த வகையான ஆர்வத்தை நாம் எப்படி விருத்திசெய்ய முடியும்?*

*கூடுதல் படிப்பு: ஆகாய் 1*

---

## *"கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்"* **48**

***சகரியா 10–14; மல்கியா***

*சகரியா 10–14 மற்றும் மல்கியா படிக்கவும்.*

- *கடைசி நாட்களில் நடக்கும் அநேக சம்பவங்களை சகரியாவும் மல்கியாவும் தீர்க்கதரிசனமுரைத்தார்கள். பின்வரும் பகுதிகளில் எந்த சம்பவங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன?*

  *சகரியா 12:2–3, 8–9*

  *சகரியா 14:3–4 (கோ.உ 45:48ஐயும் பார்க்கவும்)*

  *சகரியா 12:10; 13:6 (கோ.உ 45:51–53 ஐயும் பார்க்கவும்)*

  *சகரியா 14:5 (கோ.உ 88:96–98ஐயும் பார்க்கவும்)*

  *சகரியா 14:9*

  *சகரியா 14:12–13; மல்கியா 4:1–3 (1 நெப்பி 22:15–17, 19 ஐயும் பார்க்கவும்)*

  *மல்கியா 3:1*

  *மல்கியா 4:5–6 (கோ.உ 2; 110:13–16ஐயும் பார்க்கவும்)*

- *தசமபாகங்களையும் காணிக்கைகளையும் மக்கள் செலுத்தாதபோது அவர்கள் "தேவனை வஞ்சிக்கிறார்கள்" என மல்கியா சொன்னான் (மல்கியா 3:8–9).*
- *"பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புதல்" என்றால் அர்த்தம் என்ன? (ஆசாரியத்துவத்தின் முத்திரிக்கும் வல்லமையின் மூலமாகவும் உயிரோடிருப்பவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் இருக்கிற ஆலய நியமங்கள் மூலமாகவும் நமது "பிதாக்களான" நமது முன்னோர்கள் அனைவருடனும், நமது "பிள்ளைகளான" நமது அனைத்து சந்ததியருடனும் நித்தியமாக முத்திரிக்கப்படுவது என்பது அதன் அர்த்தம்).*
- *உங்களின் முன்னோர்களுக்காக குடும்ப வரலாற்றையும் ஆலயப்பணியையும் நீங்கள் செய்யும்போது உங்கள் முன்னோர்களுடைய இருதயத்துடன் உங்கள் இருதயம் திரும்பும்போது எவ்வாறு நீங்கள் உணர்ந்தீர்கள்? ஆலய உடன்படிக்கைகளின் வாக்குத்தத்தங்கள் எவ்வாறு உங்கள் இருதயத்தை உங்கள் பெற்றோரிடத்தில், துணையிடத்தில், பிள்ளைகளிடத்தில் திருப்புகிறது?*

*கூடுதல் படிப்பு: கோட்பாடும் உடன்படிக்கைகளும் 45.*

பிற்காலப்
பரிசுத்தவான்களின்

# இயேசு கிறிஸ்து

சபை

*முன் அட்டை: ஏலியிடம் தனது மகன் சாமுவேலை*
*அன்னாள் சமர்ப்பித்தல், -ராபர்ட் டி.பாரெட்*

*பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபை*
*சால்ட் லேக் சிட்டி, யூட்டாவால் வெளியிடப்பட்டது*
© 1996 by Intellectual Reserve, Inc.
*அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது*

*அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அச்சடிக்கப்பட்டது*
*ஆங்கில அங்கீகாரம்: 1/01. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 1/01*
*Old Testament: Class Member Study Guide ன் மொழிபெயர்ப்பு.* Tamil. 34592 418

TAMIL
4 02345 92418 6
34592 418